2020 - இதழ் 06 இலவசம்

ஆனி - 2020

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் 2020 - இதழ் 06

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிரேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2020 - இதழ் 06


### 4 எனக்கு யார் உண்டு?

நாம் காண்கின்ற பந்தபாசங்களும் உறவுகளும் இவ்வுலகிலே எமக்குண்டானவைகள். அவை இவ்வுலகிலே நாம் வாழ்வதற்கு தேவன் எமக்கு உண்டுபண்ணியவைகள். முடிவிலே அவை எம்மோடு வருவதில்லை.

### 6 சமநிலையான வாழ்க்கை

சிறப்பாக மேடையேற்றப்பட்ட எல்லா நாடகங்களும் நன்றாக பயிற்சி எடுக்கப்பட்டு முன்னதாகவே ஒத்திகை பார்க்கப்பட்டவைகள். எனவே, நீ நாளாந்தம் பயிற்சி செய்யும் எந்தக் காரியமும் உன்னுடைய சுபாவமாக மாறிவிடும் என்று கூறினார்.

### 12 பிரசங்கக் குறிப்புகள்

எங்களுடைய வாழ்க்கையின் பின்னடைவுகளில் நாங்கள் தரித்து நிற்காமல், எங்கள் இருதயத்தை உடனடியாக கர்த்தரிடத்திற்கு திருப்ப வேண்டும். நாங்கள் எங்கள் கர்த்தரை நோக்கி பார்த்து, எங்கள் இருதயத்தை அர்ப்பணிக்கும் போது குணமாகுதல் அங்கே உடனடியாக ஆரம்பிக்கும்.

### 14 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


கிரேஸ் (ற்)ரபனக்கல்


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

info@gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 14ம் பக்கத்திலிருந்து...


**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... ஆனி 1, 3, 5, 8, 14, 15, 16, 18, 19, 21, 24, 25, 28, 29, 30

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... ஆனி 1, 5, 8, 9, 14, 15, 18, 19, 21, 24, 25, 28, 30

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... ஆனி 6, 7, 24

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... ஆனி 1, 3, 4, 6, 7, 9, 10, 11, 15, 16, 17, 19, 20, 25, 28

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**

... ஆனி 1, 4, 6, 7, 9, 10, 11, 12, 13, 20, 23, 29

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... ஆனி 2, 4, 5, 12, 14, 17, 21, 22, 26, 27, 30

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... ஆனி 2, 10, 14, 17, 19, 20, 21, 22, 26, 29

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... ஆனி 3, 5, 6, 14, 17, 19, 20, 21, 22, 25, 26, 27

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... ஆனி 3, 4, 5, 20, 21, 22, 23

**பொறுமையோடு காத்திருங்கள்**

... ஆனி 2, 9, 10, 11, 12, 15, 24, 28, 29, 30

**தேவ நீதி வெளிப்படும்**

... ஆனி 2, 6, 9, 10, 1, 12, 28

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... ஆனி 4, 12, 13, 17, 18, 20, 22, 25, 27

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... ஆனி 1, 4, 5, 6, 8, 16, 18, 23, 29, 30

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... ஆனி 1, 6, 8, 11, 12 , 24, 27


gtachurch.ca

# எனக்கு யார் உண்டு?

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

யோபு என்னும் தேவ பக்தன் தனது பிள்ளைகளையும் தனக்குண்டாயிருந்த மற்றய செல்வங்களையும் இழந்தபோது, நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன். நிர்வாணியாய் அவ்விடத்திற்குத் திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.

நாம் காண்கின்ற பந்தபாசங்களும் உறவுகளும் இவ்வுலகிலே எமக்குண்டானவைகள். அவை இவ்வுலகிலே நாம் வாழ்வதற்கு தேவன் எமக்கு உண்டுபண்ணியவைகள். முடிவிலே அவை எம்மோடு வருவதில்லை. சில சமயம் சிலருடைய வாழ்விலே அவை இவ்வுலகிலேயே மறுக்கப்பட்டு அல்லது மறக்கப்பட்டு போவதுமுண்டு.

முந்திய காலத்தைப்போன்று இப்போதில்லையே என்று மனிதர் சொல்லக்கேட்டிருக்கிறோம்.

**மனிதகுலமானது மாறுதலுக்குள்ளாகி செல்லுகின்றது.**

நாம் எச்சரிக்கையாக இருக்கும்படி அப்போஸ்தலனான பவுல் அறி வுரை கூறியுள்ளார். அதில், “மேலும் கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்கா தவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவ பக்தியின் வேஷத் தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.” என்று கூறியுள்ளார்.

மேற்கூறிய பொல்லாத சுபாவங்கள் இன்னும் அதிகமாக இவ்வுலகிலுள்ள உறவுகளை ஸ்திரமற்றதாக்குகின்றன. முன்னைய காலங்களிலும் இப்படிப்பட்ட மனிதர்கள் இருந்துள்ளார்கள். தாவீது இராஜாவின் மகன் அப்சலோம் தன் தகப்பனுக்கு விரோதமாய் எழும்பி, அரசாட்சியை தனதாக்கிக்கொண்டான். அந்தவேளையிலே தாவீது அழுதவனாய் தேவனை நோக்கி “கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்.” என்று ஜெபித்தார். தேவன் அவருக்கு இரங்கி நன்மை செய்து மீண்டும் இராஜ்ஜியத்தைக் கொடுத்தார்.

இன்றைய நாட்களில் உண்டாக்கியுள்ள சூழ்நிலையானது உறவுகளிருந்தும் அவை உருகித்துடித்து நின்றபோதும், அவை சமீபித்து அருகில் வர முடியாதபடி அவற்றை அடைத்து போட்டதாயுள்ளது.

பரிசுத்த வேதாகமத்திலே "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை." (சங்:73) என்று ஆசாப் கூறியுள்ளதை காண்கிறோம்.

## தேவன் ஒருவரே எங்களைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறவராயுள்ளார்.

இக்கட்டுகள் சூழ்ந்து நெருக்கப்பட்டபோது ஆசாப் தனது சங்கீதத்தில் (சங்:77) "ஆண்டவர் நித்தியகாலமாய்த் தள்ளிவிடுவாரோ? இனி ஒரு போதும் தயைசெய்யாதிருப்பாரோ? அவருடைய கிருபை முற்றிலும் அற்று ப்போயிற்றோ? வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந் துபோயிற்றோ? தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ? கோபத்தினாலே தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக்கொண்டாரோ? என்றேன். அப்பொழுது நான்: இது என் பலவீனம், ஆனாலும் உன்னதமானவரு டைய வலதுகரத்திலுள்ள வருஷங்களை நினைவுகூருவேன். கர்த்தரு டைய செயல்களை நினைவுகூருவேன், உம்முடைய பூர்வகாலத்து அதி சயங்களையே நினைவுகூருவேன், உம்முடைய கிரியைகளையெல் லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன் என்றேன்." என்று கூறியுள்ளார்.

உன்னதமானவருடைய வலதுகரத்திலுள்ள வருஷங்கள் ஆசீர்வாதமான வைகள், அவர் நமக்கு செய்த நன்மைகளை நாம் நினைப்போமானால் அவரது வலதுகரத்திலுள்ள வருஷங்கள் ஆசீர்வாதமானவைகள் என்பதை உறுதியுடன் கூற முடியும்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

பரலோகத்திலே தேவனையல்லாமல் எங்களுக்கு யாருமில்லை. பூலோக த்தில் அவரைத் தவிர எங்களுக்கு வேறே ஆறுதலுமில்லை.

என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தஞ்செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது, ஒரு வரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிமுடியாது, நான் அவை களைச் சொல்லி அறிவிக்கவேண்டுமானால் அவைகள் எண்ணிக் கைக்கு மேலானவைகள்.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு நேரலையில் www.gtachurch.ca/live இணையதளத்தின் வழியாக தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அழைக்கின்றேன்.

**கிருபையின் கூடார அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# சமநிலையான வாழ்க்கை?

தெருவோரமாக நண்பர்களுடன் கூடி சுவாரசியமாக பேசிக் கொண்டிருந்த தன் பேரனின் பேச்சு சற்று வழி விலகிப் போவதை, வெளி முற்றத்தில் பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்த அவனது பாட்டனார் கேட்டுக் கொண்டிருந்தார். பேரனின் நண்பர்கள் சென்ற பின்பு, பாட்டனார் தன் பேரனை அழைத்து:

பாட்டனார்: தம்பி, இன்று நீ உன் நண்பர்களுடன் பேசிய வார்த்தைகள் ஏற்புடையவைகள் அல்ல. உன் வார்த்தைப் பிரயோகங்களை சற்று கவனித்து பேச்சை சீர்ப்படுத்திக் கொள் என்று தயவாக கூறினார்.

பேரன்: பாட்டா, இது புது யுகம்! புதிய தலைமுறை! நாகரீகமான காலம்! நான் பேசியதின் கருபொருளை என்ன என்பதை என் நண்பர்கள் நன் றாக புரிந்து கொள்வார்கள். இந்த அற்பமான காரியத்தைக் பெரிது படுத் தாதீர்கள் என்று நகைச்சுவையாக மறுமொழி கூறினான்.

பாட்டானார்: இங்கே சற்று அமர்ந்து கொள். என்னுடைய வாலிபப் பிராய த்தின் நாட்களிலே, போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்ட புகையிரதம் மிக வும் மெதுவாகவே சென்று கொண்டிருக்கும். ஆனால், இன்றைய நவீன தொழில்நுட்ப உலகிலுள்ள புகையிரதங்களின் வேகத்திற்கு அதை எந்த அளவிலும் ஒப்பிட முடியாது. ஆனால், இரண்டு புகையிரதங்களும், தண்ட வாளத்தைவிட்டு விலக முடியாது. வேகமாக செல்லும் புகையிரதம் தண்ட வாளத்தைவிட்டு விலகிச் சென்றால் அதனால் உண்டாகும் விபரீத ங்கள் மிகவும் பயங்கரமாக இருக்கும். சிறப்பாக மேடையேற்றப்பட்ட எல்லா நாடகங்களும் நன்றாக பயிற்சி எடுக்கப்பட்டு முன்னதாகவே ஒத் திகை பார்க்கப்பட்டவைகள். எனவே, நீ நாளாந்தம் பயிற்சி செய்யும் எந்தக் காரியமும் உன்னுடைய சுபாவமாக மாறிவிடும் என்று கூறினார்.

பேரன்: பாட்டா, எப்போதும் வேதமும் ஆலயமும் என்று வாழமுடியாது. ஆலயத்திற்கு சென்றோம், ஆராதித்தோம், பிரசங்கத்தைக் கேட்டோம், வீட்டிலே வேதத்தை வாசித்து ஜெபித்தோம். அவை போதாதா? வாழ்க் கையில் கல்வி, வேலை, நண்பர்கள், உறவு என்று பல விடயங்கள் உண்டு. இந்த உலகிலே நீங்கள் போடும் வட்டத்திற்குள் வாழ்க்கையை வாழ முடியாது என்று சற்று கடினமாக பதிலளித்து, அவ்விடத்தைவிட்டு சென்று விட்டான்.

அந்த வாலிபன் தன் பாட்டனாருக்கு கூறிய பதிலை சற்று ஆராய்ந்து பார்ப்போம். அதாவது, அந்த வாலிபனுடைய வாழ்க்கையை குறித்து அல்ல, எங்களுடைய வாழ்க்கையை மையமாக வைத்து ஆராய்ந்து பார்ப்போம். அந்த வாலிபன் கூறிய முறையீடுகளாவன:

- வாழ்க்கையில் கல்வி, வேலை, நண்பர்கள், உறவு, உல்லாசம் என்று பல விடயங்கள் உண்டு.
- ஏன் இப்படியாக அற்பமான காரியங்களை பெரிதாக்கிக் கொள்கி ன்றீர்கள்?
- இது புது யுகம்! புதிய தலைமுறை! நாகரீகமான காலம்!

கிறிஸ்தவ வாழ்க்கை என்பதன் கருப்பொருள் என்ன? கிறிஸ்தவ வாழ்க்கை மனிதனுடைய வாழ்க்கையின் எப்பகுதியில் உண்டு?

இன்றைய உலகிலே பலர் கிறிஸ்தவத்தை ஆலய வளாகத்திற்குள்ளே அடக்கி வைத்திருக்கின்றார்கள். வேதம் வாசிப்பதும், ஜெபிப்பதும், ஆராதிப்பதும், தேவ செய்தியை கேட்பதும் ஆலய சம்பந்தமான விடயங்கள் என்றும் பின்பு வீட்டில் சற்று நேரம் வேதாகமத்தை வாசித்து ஜெபித்து விட்டால் போதும் என்றும் இவற்றை வழமைபோல (routine work) நிறைவேற்றிய பின்பு, வாழ்க்கையின் மற்றய செயற்பாடுகள் யாவும் "என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை" என்று எண்ணமுடையவர்களாக வாழ்கின்றார்கள். இந்த தனிப்பட்ட வாழ்க்கையின் செயற்பாடுகள் ஒரு நீண்டபட்டியல்! அவற்றுள் பொதுவாக காணப்படும் காரியங்களாவன:

- குடும்ப வாழ்க்கை
- பாடசாலை, கல்வி நிலையங்களிலுள்ள வாழ்க்கை
- வேலை செய்யும் இடத்திலுள்ள வாழ்க்கை
- நண்பர்கள், அயலவர்கள் மற்றும் உறவுகளோடுள்ள வாழ்க்கை
- பொழுது போக்குக்குரிய வாழ்க்கை
- சமூக வலைய தொடர்புக்குரிய வாழ்க்கை (Social life)
- சுற்றுலா உல்லாசப் பயண வாழ்க்கை
- களியாட்டங்களுக்குரிய வாழ்க்கை (Party Life)

ஒரு பக்கத்திலே உலகமும் அதன் போக்குகளும் மறுபக்கத்திலே கிறிஸ்தவமும் இருக்கின்றது. எனவே, இரண்டிற்கும் நடுவே சமநிலை யான வாழ்க்கையை நாங்கள் வாழ வேண்டும் (living a balance life) என்பதே பலருடைய ஆதங்கமாக இருக்கின்றது. அதாவது, இந்த உலகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், தேவனாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இவை இரண்டும் சந்திக்கும் இடத்திலுள்ள வாழ்க்கையே ஏற்புடையது என்று எண்ணிக் கொள்கின்றார்கள். இந்த உலகத்தின் போக்குக்குரிய வாழ்வும் கிறிஸ்துவை சார்ந்து வாழும் வாழ்க்கையும் எந்த காலத்திலும் ஒத்திருப்பதில்லை. இதைக் குறித்து பரிசுத்த வேதாகமம் கூறும் சில வார்த்தைகளாவன:

"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." (ரோமர் 12:1),

"...உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்." (யாக்கோபு 4:4),

"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டான

வைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிற வனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்." (1 யோவான் 2:15-17),

"தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது." (மத்தேயு 6:24).

நாங்கள் ஏன் ஆலயத்திற்கு செல்கின்றோம்? ஏன் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கின்றோம்? ஏன் ஜெபிக்கின்றோம்? அப்போஸ்தலரையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகரையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் தேவன் தாமே ஏன் ஏற்படுத்தினார்? எங்களுக்குள் வாசம் செய்யும்படி ஏன் சத்திய ஆவியானவரை எங்களுக்கு கொடுத்திருக்கின்றார்? (எபேசியர் 4:11-13)

- நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் (இயேசுவைப்) பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்
- கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராக வேண்டும்
- பரிசுத்தவான்களாக அழைக்கப்பட்ட நாங்கள் சீர்பொருந்த வேண்டும்
- கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும்
- கிறிஸ்துவின் சரீரமாகிய, சபையாகிய நாங்கள் பக்திவிருத்தி அடைய வேண்டும்.
- முடிவிலே பரலோகிலே இயேசுவோடு நீடூழியாய் வாழ வேண்டும்

மேற்கூறப்பட்டவைகளாகிய, பிதாவாகிய தேவனுடைய திட்டமானது, எங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் நிறைவேற்றுவதற்கு தடையாக, பிசாசானவனின் வஞ்சிக்கும் தந்திரங்கள் எப்போதும் எங்களை எதிர்த்து செயற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:11-12)

பிசாசானவனின் தந்திரங்களை எதிர்த்து போராடும், "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். (2 கொரி 10:4)

பிசாசின் வஞ்சிக்கும் தந்திரங்களை இனம்கண்டு ஜெயிக்கும்படிக்கு பரிசுத்த வேதாகமத்திலே தேவனுடைய வார்த்தை வழியாக தரப்பட்டிருக்கும் சர்வாயுதவர்க்கத்தை எப்போதும் அணிந்தவர்களாக, "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே

ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.'' (எபேசியர் 6:13-18)

எங்கள் குடும்ப வாழ்க்கையில், பாடசாலை, கல்வி நிலையங்களிலுள்ள வாழ்க்கையில், வேலை செய்யும் இடத்திலுள்ள வாழ்க்கையில், நண்பர்கள், அயலவர்கள் உறவுகளோடுள்ள வாழ்க்கையில், பொழுது போக்குக்குரிய வாழ்க்கையில், சமூக வலைய தொடர்புக்குரிய வாழ்க்கையில், சுற்றுலா உல்லாசப் பயண வாழ்க்கையில் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்த வேண்டும்.

பரலோக யாத்திரிகள் எப்படியான எண்ணமுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தெளிவாக கூறியிருக்கின்றார்.

“உன் கையாவது உன் காலாவது உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு நீ இரண்டு கையுடையவனாய், அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், சப்பாணியாய், அல்லது ஊனனாய், நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். உன் கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு இரண்டு கண்ணுள்ளவனாய், எரிநரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.'' (மத்தேயு 18:8-9) கருப்பொருளாவது, இந்த உலகத்திலேயுள்ள எந்த ஒரு நபரையோ, எந்த ஒரு உலக பொருளையோ, எந்த ஒரு பேச்சையோ, உணர்வையோ, சிந்தையையோ, செய்கையையோ, அவயவத்தையோ, உறவையோ, நட்பையோ பரலோக ராஜ்யத்திற்கு மேலாக முக்கியப்படுத்தலாகாது. பரலோக ராஜ்யமே எங்கள் முதன்மையான இலக்காக எப்போதும் வைத்துக் கொள்ள வேண்டும். (பிலிப்பியர் 3:7-14)

எடுத்துக் காட்டாக, ஓய்வும் ஆறுதலும் வேண்டும் என்று பலர் சுற்றுலா, உல்லாசப் பயணங்களை மேற்கொள்கின்றார்கள். ஆனால், நாங்கள் எங்கு சென்றாலும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஓய்வு கொடுக்க முடியாது. அதாவது, நான் சுற்றுலா உல்லாசப் பயணத்தில் இருக்கின்றேன், ஆகவே தேவனை அறியாத மற்றய பயணிகளைப் போல, என் விருப்பப்படி நான் எதையும் செய்து கொள்ளலாம் என்றிருக்க முடியாது. நாங்கள் சுற்றுலா உல்லாசப் பயணத்தில் இருப்பதால் பிசாசானவன் எங்களுக்கு எதிரான தன் வஞ்சிக்கும் தந்திரமான போராட்டத்திலிருந்து ஓய்வெடுக்கப்போவதில்லை. அவன் இன்னும் அதிகமாக செயல்ப்படுவான். நான் எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் அவை தேவனுக்கு பிரியமுள்ளதாக இருக்க வேண்டும். அந்த பயணத்தில் தேவனுக்கு பிரியமாக இருக்க முடியாது என்றால், அந்த பயணத்தை விட்டுவிடுவது எங்கள் ஆத்துமாவிற்கு நல்லது. “உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே. ஆகையால் தேவனுக்கு

உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியி னாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." (1 கொரிந்தியர் 6:19-20)

"எந்த ஒரு நன்மையான காரியத்திற்கும், தீமையான காரியத்திற்கும் ஒரு சிறிய ஆரம்பம் உண்டு. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இற ங்கிவருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்று மையின் நிழலுமில்லை." (யாக்கோபு 1:17) பிதாவாகிய தேவனாலே உண்டாகாத எந்த ஒரு காரியமும் முடிவிலே தீமையை உண்டாக்கும். "ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டா னவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்." (1 யோவான் 2:16). இவைகளை அற்பமாக எண்ணாதிருங்கள். அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரண மாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும். (யாக்கோபு 1:15-16)

**சொல்லாலோ, செயலாலோ, சிந்தனையினாலோ, நன்மையானதை தன் வாழ்வில் பயிற்சி செய்கின்றவனுக்கு, நன்மை செய்வது அவன் வாழ்வில் சுபாவமாக மாறிவிடும்.**

அவன் கிறிஸ்துவின் சுபாவத்திலே நாள்தோறும் பெருகிக் கொண்டிருப்பான். சொல்லாலோ, செயலாலோ, சிந்தனையி னாலோ, தீமையை தன் வாழ்வில் பயிற்சி செய்கின்றவனுக்கு தீமை அவன் வாழ்வில் சுபாவமாக மாறிவிடும். அவன் கிறிஸ்துவின் சுபாவத்தில் பெருகப்போவதில்லை.

"மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார் மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்ச த்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் ஆவிக் கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான். நன் மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்துபோகா திருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்." (கலாத்தியர் 6:7-9)

"கொஞ்சம் புளித்தமா பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா?" (1 கொரி 5:6, கலாத்தியர் 5:9)

உங்கள்: குடும்ப வாழ்க்கையில், பாடசாலை, கல்வி நிலையங்களிலுள்ள வாழ்க்கையில், வேலை செய்யும் இடத்திலுள்ள வாழ்க்கையில், நண்பர் கள், அயலவர்கள் உறவுகளோடுள்ள வாழ்க்கையில், பொழுது போக்குக் குரிய வாழ்க்கையில், சமூக வலைய தொடர்புக்குரிய வாழ்க்கையில், சுற்றுலா உல்லாசப் பயண வாழ்க்கையில், நீங்கள் எதை சிறிதாக பயி ற்சி செய்கின்றீர்களோ, அவை நாளடைவிலே உங்கள் முழு வாழ்க்கை யையும் மேற்கொண்டு விடும். ஆகவே நீங்கள் எதையும் அற்பமாக எண் ணாதிருங்கள்.

“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.” (1 பேதுரு 5:8)

இப்போது, அந்த வாலிபன் தன் பாட்டனாருக்கு கூறிய பதிலைமையமாக வைத்து உங்கள் வாழ்க்கையை சிந்தித்துப் பாருங்கள்.

- வாழ்க்கையில் கல்வி, வேலை, நண்பர்கள், உறவு உல்லாசம் என்று பல விடயங்கள் உண்டு.
- ஏன் இப்படியாக அற்பமான காரியங்களை பெரிதாக்கிக் கொள்கின்றீர்கள்?
- இது புது யுகம்! புதிய தலைமுறை! நாகரீகமான காலம்!

பண்டைய நாட்களிலே விவசாயிகள் வயலை உழுவதற்கு கலப்பையை உபயோகித்தார்கள். விதைகளை தங்கள் கைகளால் அள்ளி தூவினார்கள். ஆனால், இன்றைய நாட்களிலே, பரந்த பிரதேசங்களை ஒரே நாளிலே இயந்திரங்களினால் உழுது, பண்படுத்தி, விதைகளை விதைக்கின்றார்கள். செய்யும் முறைகள் நவீனமடைந்திருந்தாலும், ஒரு விவசாயி எதை விதைக்கின்றானோ அதையே அறுப்பான் என்பது மாறிப் போவதில்லை.

**இது புது யுகமாக இருக்கலாம், புதிய தலைமுறையாக இருக்கலாம், நாகரீகமான காலமாக இருக்கலாம் ஆனால் தேவனுடைய வார்த்தை மாறிப்போவதில்லை.**

“மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார் மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.” (கலாத்தியர் 6:7-8) என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது.

பிரியமானவர்களே, பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு தேவன் எங்களை வேறு பிரித்திருக்கின்றார். அவருடைய அநாதி தீர்மானம் எங்களில் நிறைவேறும்படிக்கு உலக போக்கிற்குரிய சமநிலையான வாழ்வைக் களைந்து, தேவனுக்கு பிரியமான பரிசுத்த வாழ்வை வாழ்வோமாக.

**இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவன், உங்களை வழிநடத்திச் செல்வாராக! ஆமேன்!**

# ஆசீர்வாதமும் சாபமும்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**பிரதான வாசகம் - உபாகமம் 30:19-20**

பொதுவாக மனிதர்கள், தங்களுடைய வாழ்க்கையைக் குறித்த நடபடிகள் இன்ன விதமாக இருக்க வேண்டும் என்று சிந்தனை செய்து, தங்கள் மனவிருப்பத்தின்படி தீர்மானங்களை எடுக்கின்றார்கள். சில மனிதர்கள் தங்கள் வாழ்க்கையின் தீர்மானங்களை எடுக்கும் போது, எது சரி எது பிழை என்று சிந்திக்காமல், தாங்கள் நினைத்ததையே செய்வோம் என்று தங்கள் முரட்டு வைராக்கியங்களினால் முடிவுகளை எடுத்துக் கொள்கின் றார்கள். மனிதன் எதை விதைக்கின்றானோ அதன் பலனை அறுப்பான் என்ற பிரகாரமாக, தினை விதைத்தவன் தினையை அறுப்பான். வினை விதைத்தவன் வினையை அறுப்பான். எனவே எங்களுடைய சொந்த தீர் மானங்களே, எங்களுடைய வாழ்க்கை எப்படியாக அமையப் போகின்றது என்பதை நிர்ணயிக்கின்றது.

தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனங்களை நோக்கி: நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைக்கின் றேன் என்றார். ஒரு பக்கத்திலே ஆசீர்வாதமும் ஜீவனும், மறுபக்கத்திலே சாபமும் மரணமும் உண்டு. உனக்கு எது வேண்டும்? தீர்மானம் உன்னுடையதாக இருக்கின்றது. உன் வீடு அழகாக காட்சி அளிக்கின்றது ஆனால் வாழ மறந்து விடாதே. இன்று தேவனுடைய ஜனங்களில் பலர் ஆராதனைக்கு என்ன பாடலைப் பாடுவோம், எந்த வசனத்தை கூறு வோம், யாருக்கு என்ன உதவியை செய்வோம் என்று பல செயற்திட்டங் களை குறித்து பேசிக் கொள்கின்றார்கள். இசையை நேர்த்தியாக வாசி த்து பாடல்களை அழகாக பாடுவது நல்லது. வேத வசனங்களை வாசி த்து பிரசங்கிப்பது நல்லது. நன்மை செய்யும் பல செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதும் நல்லது. அத்துடன் நின்றுவிடாமல், பிதாவா கிய தேவனுடைய சித்தத்தை நாங்கள் எங்கள் வாழ்க்கையில் நிறைவேற் றுகின்றவர்களாக நாங்கள் வாழ வேண்டும்.

“இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.” என்ற வசனத்தின்படி மனிதனுடைய இருதயத்திலே இருந்து வராத எந்த தேவ பக்திக்குரிய காரியமும் மாய்மாலமுள்ளதாக இருக்கும். (மத்தேயு 15:7-8). எனவே எங்களுடைய வாழ்க்கையின் நற்கிரியைகள் இருதயத்திலே ஆரம்பிக்க வேண்டும். தேவனிடத்திற்கு வருகின்ற ஜனங்கள், பாவ சாப கட்டுகளிலிருந்து விடுத லையைப் பெற்றக் கொள்கின்றார்கள். அவர்கள் தேவனுடைய வாக்கு த்தத்தங்களுக்கு உரிமையுடையவர்களாக இருக்கின்றார்கள். கர்த்தரு டைய கண்கள் அவர்கள்மீது நோக்கமாயிருக்கின்றது. அவருடைய செவி கள், தம் ஜனங்களின் கூப்பிடுதலைக் கேட்க திறந்திருக்கின்றது ஆனால் இவர்களோ வார்த்தையின்படி வாழ மறந்துவிடுகின்றார்கள். இது ஒரு பரிதாபமான நிலை. நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாத த்தை யும் சாபத்தையும் உனக்குமுன் வைக்கின்றேன். நீயும் உன் சந்ததியும் வாழ்வடையம்படிக்கு, ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் தெரிந்து கொள் என்று கர்த்தர் கூறியிருக்கின்றார்.



gtachurch.ca

இன்று பலர், தங்கள் பழைய வாழ்க்கையாகிய இந்த உலகத்தின் போக்குகளை பற்றிக் கொள்ள வேண்டும், அதன்படி வாழ வேண்டும் ஆனாலும் கர்த்தர் எங்களைவிட்டு விலகாமலும் கைவிடாமலும் இருந்து எங்களை ஆசீர்வதிக்க வேண்டும் அவர் எங்களோடு இருக்க வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். "நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை" என்று கர்த்தர் கூறியிருக்கின்றார். ஏன் கர்த்தர் எங்களைவிட்டு விலகாமலும் கைவிடாம லும் இருக்கின்றார்? இந்த பூமியிலே நாங்கள் எங்களுக்கு என்று நிரந்தர கூடாரத்தை அமைத்துக் கொள்வதற்காகவா? இல்லை, நாங்கள் இந்த அநித்தியமான வாழ்வை கடந்து, நித்தியமான பரலோகத்திற்கு சென்ற டையும்படிக்கே அவர் எங்களைவிட்டு விலகாமலும் கைவிடாமலும் இருக் கின்றார்.

ஒருவேளை இந்த நாட்களிலே நீங்கள் செய்த குற்றத்தினால் உங்கள் வாழ்க்கையில் பின்னடைவை அடைந்திருக்கலாம். இயேசுவின் சீஷனா கிய பேதுருவின் வாழ்க்கையைப் பாருங்கள். சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங் களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்: நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்று இயேசு சீமோன் பேதுருவை பார்த்துக் கூறினார். சீமோன் பேதுருவோ, நான் இயேசுவை அறியேன் என்று அவரை மூன்று முறை மறுதலித்தான், சபிக்கவும் தொட ங்கினான். அவனுடைய வாழ்க்கையிலே பின்னடைவு ஏற்பட்டது ஆனால் பேதுரு குணமடைவதற்கு எவ்வளவு காலம் எடுத்தது? அவன் தன் குற் றத்தில் பல நாட்கள் தரித்திருக்கவில்லை. அவன் இயேசுவை மறுதலித்த பின்பு, இயேசு அவனை திரும்பிப் பார்த்த போது, தன் குற்றத்தை உண ர்ந்து, மனங்கசந்து அழுதான். அவனுடைய வாழ்க்கையிலே மனந்திரும் புதலானது எந்த தாமதமுமின்றி உடனடியாக ஏற்பட்டது. இயேசு உயிர் தெழுந்தபோது தம்முடையவர்களை தேடிச் சென்றார். பேதுருவை சந்தி த்தார். அவன் பூரணமாக குணமடைந்தான்.

எங்களுடைய வாழ்க்கையின் பின்னடைவுகளில் நாங்கள் தரித்து நிற் காமல், எங்கள் இருதயத்தை உடனடியாக கர்த்தரிடத்திற்கு திருப்ப வேண் டும். நாங்கள் எங்கள் கர்த்தரை நோக்கி பார்த்து, எங்கள் இருதயத்தை அர்ப்பணிக்கும் போது குணமாகுதல் அங்கே உடனடியாக ஆரம்பிக்கும்.

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள் கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசி க்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் என்று இயேசு கூறியிருக்கின்றார் (மத்தேயு 7:13-14) நாங்கள் எங்கள் வாழ்வை தேவனுக்கு ஒப்புக் கொடுப்போம். நித்திய வாழ்வை சுதந்தரித்துக் கொள் ளும்படிக்கு, ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் தெரிந்து கொண்டு, அதைப் பற்றிக் கொள்ளும்படி இடுக்கமான வாசல் வழியாய் பிரவேசி ப்போம்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும் இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]

# இது புது யுகம்

தன் பேரப்பிள்ளையின் போக்கை கண்டு மனம் வருந்திய பாட்டனார், “இந்த உலகம் மாறிப்போய்விட்டது” என்று தனக்குள்ளே மனவருத்தப் பட்டார். இந்த பூமியானது பல யுகங்களை (ages, period of time) கடந்து வந் திருக்கின்றது. எடுத்துக்காட்டாக இன்ரநெற் என்றால் என்ன என்று அறி யாத உலகம் சில தசாப்த்தங்களுக்கு முன்பு இருந்தது, அது அன்றைய உலகம். ஆனால் இன்றைய உலகிலே அது சர்வ சாதாரணமாக மாறிவிட்டது. இப்படியாகவே, எங்களுக்கு முன் இரு ந்த சந்ததி வாழ்ந்த உலகமும், அந்த சந் ததிக்கு முன்னிருந்த சந்ததி வாழ்ந்த உலகமும் வேறுபட்டிருந்தது. பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. அவரே அதைக் கடல்களுக்கு மேலாக அஸ்தி பாரப்படுத்தி, அதை நதிகளுக்குமே லாக ஸ்தாபித்தார். (சங் 24:1-2). அவர் ஆதியிலே உருவாக்கிய உலகம் நல்லது. ஆனால் மனிதன் தன்னை பொல்லாங்கனுடைய வஞ்சகத்திற்கு ஒப்புக் கொடுத்தபடியால், பூமியா னது சிருஷ்டிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரைக்கும் அதன் உலக போக்குகள் மாறிக் கொண்டே போகின்றது. அந்தந்த காலப் பகுதிக ளிலே (யுகத்திலே) வாழ்ந்த மனிதர்களின் வாழ்க்கை முறை அந்தந்த காலகட்டத்திற்குரிய உலக போக்கை நிர்ணெயிக்கின்றது. உலகம் முழு வதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந் திருக்கிறோம். (1 யோவான் 5:19) பூமியும் அதன் குடிகளும் கர்த்தருடையதாக இருந்தும், அதன் குடிகள் உலகத்தின் போக்குகளுக்கு தங்களை ஒப்புக் கொடுப்ப தால், பூமியனாது அதன் குடிகளினாலே தீட்டுப்படுகி ன்றது. காலங்கள் மாறிப்போகலாம், உலகத்தின் போக்குகளின்படி சூழ்நிலைகள் மாறிப் போகலாம் ஆனால் உலகமும் பூமியும் தோன்றுமுன் அநாதியாய் என் றென்றைக்கும் இருக்கின்ற தேவனானவர் மாறாதவராயிருக்கின்றார். இந்த தேவன், தலை முறை தலைமுறையாக எமக்கு அடைக்கலமான வர். அப்படியான தேவனை கொண்ட ஜனம் பாக்கிய முள்ளது. எனவே தற்போதைய உலகத்தில் வாழ்கின்ற நாம், அந்த உலகத்தின் போக்குக ளுக்கு உடன்பட்டவர்கள் அல்லர். தேவன்தாமே நாங்கள் கெட்டுப்போ காமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு எங்களை தமக்கென்று வேறு பிரித்திருக்கின்றார். எனவே இந்த உலகத்துக்கு ஒத்த வேஷம் தரிக் காமல் மேன்மையான அழைப்பிற்கு பாத்திரராக நடந்து கொள்வோம்.

**சங்கீதம் 90:2**

பர்வதங்கள் தோன்றுமு ன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவா க்குமுன்னும், நீரே அநா தியாய் என்றென்றைக் கும் தேவனாயிருக்கிறீர்.

**ஜெபம்**: சதா காலங்களிலும் ஆளுகை செய்யும் தேவனே, நான் உம்முடைய வழிகளைவிட்டு விலகி இந்த உலகத்தின் போக்குகளுக்கு உடன்படாமல் உம்மையே பற்றிக் கொண்டு வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அடைக்கலமான தேவன்

கர்த்தருடைய கரம் எகிப்தின் மேல் கடினமாக இருந்ததால், அந்த ராஜ்யத்தின் ராஜாவாகிய பார்வோன், அடிமைத்தனத்திலிருந்த தேவனுடைய ஜனங்களை போகும்படி இடங் கொடுத்தான். கர்த்தருடைய பலத்த செய்கையை கண்ட தேவனுடைய ஜனங்கள் ஆரவாரத்தோடு எகிப்தைவிட்டுப் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் செங்கடலருகே வந்து பாளயம் இறங்கினார்கள். பார்வோனின் மனம் மறுபடியும் கடினப்பட்டு, தேவ ஜனங்களை பின்தொடர்ந்து, பிரதான இரதங்களோடு வந்தான். முன்பாக செங்கடலும், பின்பாக பார்வோனின் படையையும் கண்ட ஜனங்கள், பயந்து, கலக்கமடைந்து, கர்த்தர் செய்த பலத்த செய்கைகளை மறந்து போனார்கள். எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? என்று மேசேயிடம் முறையிட்டார்கள். கர்த்தர் செங்கடலை பிளந்து, அதன் வழியாக தம்முடைய ஜனங்களை நடத்திச் சென்றார். பார்வோனின் சேனையும், அதன் வழியாக பின் தொடர்ந்த போது, ஆழி அவர்களை மூடி அவர்களை அழித்துப் போட்டது. ஜனங்கள் ஆர்ப்பரித்து மகிழ்ந்து பாடினார்கள். கர்த்தரைத் துதித்தார்கள். மூன்று நாட்களுக்கு பின்பு, தாங்கள் இருக்கும் இடத்தில் குடிக்கத் தண்ணீர் இல்லை என்று முறுமுறுக்கத் தொடங்கினார்கள். அதாவது, எதிரிடையான சூழ்நிலைகள் வரும் போது கர்த்தரையும் அவருடைய செய்கைகளையும் சீக்கிரமாய் மறந்து, வழுவிப் போகும் இருதயமுடையவர்களாக இருந்தார்கள். எங்களுடைய வாழ்விலும், கஷ்டங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, சூழ்நிலைகளை கண்டு, நாங்களும் நிலை தவறிப்போகும் நேரங்கள் ஏற்படுவதுண்டு. வாழ்வின் உயர்வான நேரத்தில் ஆர்ப்பரித்து துதிப்பதும், சாதகமற்ற சூழ்நிலைகளிலே நம்பிக்கை இழந்தவர்களைப் போல முறுமுறுக்கவும் கூடாது. மாறாக “தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடு ச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பய ப்படோம்.” என்று சங்கீதக்காரன் கூறியது போல நாங்கள் எங்கள் தேவன்மேல் நம்பிக்கை வைத்து, அவருடைய கரத்தின் பலத்த கிரியையை மறுபடியும் காணும்வரைக்கும் பொறுமையோடு அவரைத் துதித்து கொண்டு காத்திருக்க வேண்டும்.

**சங்கீதம் 46:10**

நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, என் வாழ்க்கையில் ஏற்படும் எதிரிடையான சூழ்நிலைகளை கண்டு மருளாதபடிக்கு, அந்த வேளைகளிலும் உம்முடைய நேரத்திற்காக காத்திருக்கும் உள்ளத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிம்மதியின் காரணம் என்ன?

தேசத்திலே ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால், வர்த்தக சந்தையின் பங்குகளின் விலை (stock market price) வலுவாய் வீழ்ச்சி கண்டது. இதனால் ஒரு மனிதனின் வியாபார ஸ்தாபனம் சீக்கிரத்தில் மூடப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. வசதியாக வாழ்ந்து வந்த அந்த மனிதனின் வாழ்க்கையிலே பெரும் நெருக்கம் உண்டாயிற்று. பொருளாதார நெருக்கடியினால், முன்பு இருந்த வாழ்க்கைத் தரத்தை தொடர முடியவில்லை. இடாம்பீகரமான மாளிகையை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால், அவனுடைய குடும்பத்திலே நிம்மதி குலைந்து போயிற்று. முன்பு அவனுக்கு இருந்த கனம் வீட்டில் இல்லாமல் போய் விட்டது. அந்த மனிதன், இராச்சாமங்களிலே, படுக்கையிலிருந்து தன் நிலையைக் குறித்துயோசித்துப் பார்த்தான். இவ்வளவு காலமும், எங்கள் வாழ்க்கையின் நிம்மதியும், வீட்டிலே எனக்கு கிடைத்த கனமும் என்னுடைய வியாபாரத்திலும், பங்குச் சந்தையிலுமே தங்கியிருந்திருக்கின்றதே என்று துக்கப்பட்டான். இப்படியாக, இந்த உலகில் பல மனிதர்களுடைய வாழ்க்கையின் நிம்மதியானது, கணவனின் அந்தஸ்த்திலும், மனைவியின் சௌந்தரியத்திலும், பிள்ளைகளின் உயர்வுகளிலும் தங்கியிருக்கின்றது. அந்த அந்தஸ்த்தும், சௌந்தரியமும், உயர்வும் எப்போது அற்றுப் போகின்றதோ அன்றோடு அவர்களின் நிம்மதியும் அற்றுப் போய் விடும். இப்படியாகவே, யோபு என்ற மனிதனுடைய வாழ்க்கையும் இருந்தது. இதன் அடிப்படையான காரணம் மாயமான அன்பாக இருக்கின்றது. இந்த மாயமான அன்பு அந்தஸ்த்திலும், அழகிலும், அறிவிலும் தங்கியிருக் கின்றது. ஆனால், தெய்வீக அன்பின் பிணைப்பானது உண்மையுள்ளது. அந்த அன்பானது உலக அந்தஸ்த்திலும், வெளித் தோற்றத்திலும், மனித அறிவிலும் தங்கியிருப்பதில்லை. பாவிகளாயிருக்கையிலே இயேசு எங்களுக்காக தம் உயிரைக் கொடுத்தார். அவரிலே நிலைத்திருக்கின்றவனிடத்தில் தெய்வீக அன்பின் கனியானது அவன் உள்ளத்திலும் இல்லத்திலும் வெளிப்படும். உங்கள் அன்பின் பிணைப்பு எதில் தங்கியுள்ளது என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். அந்த பிணைப்பு இயேசுவினால் உண்டான பிணைப்பாக இருந்தால், அதை எந்த அந்தஸ்த்தும், சௌந்தரியமும், அறிவும் மாற்ற முடியாது.

**யோவான் 15:5**

ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.

**ஜெபம்**: அன்புள்ள தேவனே, உம்முடைய குமாரனாகிய இயேசுவை என் வாழ்க்கையின் அடித்தளமாக கொண்டிருக்கவும், அவரிலே நிலைத்திருந்து நிலையான அன்பின் கனியை கொடுக்கவும் கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வசதிகள் நிறைவு தருவதில்லை

நாளை என் நிலை என்ன? என்னுடைய பிள்ளைகளின் எதிர்காலம் என்ன? என்ற ஏக்கம் பலரை வாட்டுகின்றது. வருங்கால பயங்கள்: வறியவர்கள், நாளாந்த, மாதாந்த ஊதியத்தில் தங்கி இருக்கின்றவர்களை மட்டுமல்ல வசதியாக வாழும் குடும்பங்களையும் வாட்டுகின்றது. வாழ்க்கையில் உண்டான வசதியினால், பலர் சிறு வயதிலிருந்தே தேவ பயம் அற்றவர்களாக வளர்ந்து வருகின்றார்கள். அவர்கள் தேவன் யார் என்று அறிந்திருந்தும், தங்களுக்கு செம்மையாக தோன்றும் வழிகளை தெரிந்து கொள்வதினால், கண்ணிகளிலே அகப்பட்டு விடுகின்றார்கள். இந்த உலகத்தினால் உண்டாகும் செழிப்பு ஒரு மனிதனுக்கு செல்வந்தன் என்ற அந்தஸ்த்தைக் கொடுக்கலாம். இந்த உலகத்தினால் உண்டான யாவற்றையும் அவனால் விலை கொடுத்து வாங்க முடியும். ஆனால் நிலையான சமாதானம் இந்த உலகத்திற்குரியதல்ல. இந்த உலகத் தினால் உண்டானதும் அல்ல. ஆகவே, அழிந்து போகும் இந்த உலகத்தின் சம்பாத்தியத்தினால், அழியாத நிலையான பரலோக சமாதானத்தை பெற்றுக் கொள்ள முடியாது. ஒரு வேளை இந்த உலகத்தினால் உண்டான தரத்தின்படி: வறியவர்கள், அல்லது நாளாந்த, மாதாந்த ஊதியத்தில் தங்கியிருப்பவர்கள் அல்லது வசதியாய் வாழ்பவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டிருக்கலாம். எப்படி இருப்பினும் தேவன், இன்று உங்கள் வாழ்வில் மனச் சமாதானத்தை கொடுக்க சித்த முள்ளவராக இருக்கின்றார். காலங்கள் கடந்து செல்லும் போது எங்கள் உலக வாழ்க்கைத்தரம் உயர்வடையலாம் அல்லது தாழ்ந்து போகலாம் ஆனால் தேவன் தரும் மனத்திருப்த்தி இந்த உலகத்தின் தராதரத்துடன் மாறிப் போவதில்லை. இந்த உலகத்தினால் உண்டாகும் உபத்திரவங்களினால் குலைந்து போவதில்லை. நிலையான பரலோக ராஜ்யத்திற்குரியவைகளை நிலையற்ற உலக ராஜ்யத்திற்குரியவைகள் மேற்கொள்ள முடியாது. முதலாவது வாழ்க்கையின் வசதியைத் தேடுவோம் பின் தேவனுக்குரியவைகளை தேடுவோம் என்ற எண்ணமுடையவர்கள் தங்களுக்கு செம்மையாக தோன்றும் வழிகளை தெரிந்து கொள்கின்றவர்களுக்கு ஒப்பாய் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட எண்ணத்தை எங்களைவிட்டு அகற்றி நிலையான தேவ ராஜ்யத்திற்குரியவைகளை தேடுவோம்.

**மத்தேயு 6:33**

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

**ஜெபம்:** பரலோக தேவனே, நிலையற்ற உலக வாழ்க்கைக்குரியவைகளை என் வாழ்வில் நான் மேன்மைப்படுத்தாமல், தேவ ராஜ்யத்திற்குரிய மேன்மையானவைகளை நாடித்தேட என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இயேசுவின் சமாதானம்

> **யோவான் 14:27**
>
> சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே, இந்த பூவுலகிலே வாழ்ந்த நாட்களிலே, தம்முடைய திருப்பணிக்காக ஊழியர்களை தெரிந்து கொண்டார். அன்றைய உலகத்திலே, வசதியுள்ள உயர் வர்க்க குழுக்களை சேர்ந்த பிரமுகர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆனால், கர்த்தர் தாமே அன்றைய உலகத்திலே கல்லாதவர்கள் என்று கணிக்கப்பட்ட எளிமையான குடிமக்களை தம்முடைய பணிக்காக பிரித்தெடுத்தார். (அப் 4:13, லூக்கா 10:21) இவர்கள் செல்வந்தர்கள் அல்லர், தங்கள் நாளாந்த ஊதியத்திலே பிழைத்துக் கொண்டவர்கள். கர்த்தராகிய இயேசு இந்த உலகத்தை விட்டு போகும் வேளை வந்த போது, தம்முடைய ஊழியர்களைப் பார்த்து: “சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலுமிருப்பதாக.” என்று கூறினார். இயேசு கூறிய இந்த வார்த்தையை, அவர்களுடைய வாழ்க்கையின் தராதரத்தோடு சற்று ஆராய்ந்து பாருங்கள். இவர்களிடம் உலக ஐசுவரியம் இருக்கவில்லை. அன்றைய உலக வழமையின்படி இவர்கள் கல்வி அறிவில்லாதவர்கள். இவர்கள் இயேசுவோடு இருந்ததால், அதிகாரிகளில் பலர் இவர்களுக்கு எதிராக இருந்தார்கள். அதாவது, அவர்கள் இருந்த சூழ்நிலையில், இந்த உலக முறையின்படி சமாதானமாக இருப்பதற்கு எந்த வழியும் இல்லை. ஆனால், கர்த்தராகிய இயேசு தம்மிடம் இருந்த சமாதானத்தை அவர்களுக்காக வைத்து சென்றார். சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவேன், அவர் வந்து உங்களை சகலவற்றிலும் நடத்துவார் என்று வாக்களித்தார். சத்திய ஆவியானவர் வந்தபோது, அவர்கள் பெலனடைந்தார்கள். இன்னும் அதிகமாக இந்த உலகத்தினால் பகைக்கப்பட்டு, மரண பரியந்தமும் உபத்திரவங்களை சகித்தார்கள். ஆனால், கர்த்தராகிய இயேசு வைத்துச் சென்ற சமாதானத்தை அவர்களிடமிருந்து ஒருவராலும் பறித்துக் கொள்ள முடியவில்லை. இன்றைய உலகிலே, உங்களுடைய நிலை என்ன? தேவ சமாதானம் உங்களில் நிலைத்திருப்பதற்கு இந்த உலக தகுதிகள் அவசியமானதல்ல. தம்முடைய சமாதானத்தை வைத்துச் சென்ற இயேசு, சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் வழியாக உங்களை திடப்படுத்தி நடத்திச் செல்வாராக.

**ஜெபம்**: அன்பின் பிதாவே, சூழ்நிலைகளால் தளர்ந்து போகாதபடிக்கு, உம்முடைய குமாரனாகிய இயேசு வழியாக பெற்ற சமாதானத்தில் நாங்கள் நிலைத்திருக்கும்படிக்கு எங்களை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நாகரீகமான உலகம்

தெரு ஓரமாக நின்று தன் நண்பர்களுடன் சுவாரசியமாக பேசிக் கொண்டிருந்த தன் பேரனின் வார்த்தைப் பிரயோகங்கள் வழி விலகிச் செல்வதை, முற்றத்தில் இருந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்த பாட்டனார் கேட்டுக் கொண்டிருந்தார். பேரனின் நண்பர்கள் சென்ற பின்பு, அவனை அழைத்து, தம்பி, உன் நண்பர்களுடன் நீ சுவாரசிய மாக பேசுவதில் தவறில்லை, ஆனால் உன் வாயின் வார்த்தைகள் பிசகாதப டிக்கு பார்த்துக் கொள். ஆகாத சம்பா ஷணைகள் நல் ஒழுக்கத்தை கெடுக் கும் என்று அறிந்து கொள் என்று கூறினார். பாட்டா, நீங்கள் இன்னும் உங்கள் வாலிப நாட்களில் நிற்கின்றீர் கள், இது புது யுகம். நாகரீகமான உலகம். இன்றைய உலகில் அற்ப மான காரியங்களை யாரும் பெரிது படுத்துவதில்லை. நான் கூறியவற்றை என் நண்பர்கள் நன்றாக அறிவார்கள் என்று பேரன் பதிலளித்தான். தம்பி, நான் வாலிபனாக இருந்த நாட்களிலே, இருந்த புகையிரதவண்டி மிகவும் மெதுவாகவே ஓடிச் செல்லும். நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினால் இன்று அதிக வேகமாக செல்லும் புகையிரத வண்டிகளும் உண்டு. ஆனாலும், அது எவ்வளவு நவீனமாக இருந்தாலும், போடப்பட்ட தண்டவாளத்திலேயே ஓடிச் செல்ல வேண்டும். அதி வேகமாக செல்வதால் சிறிய தவறுகள் பெரிய பாதிப்பை கொண்டு வரும் என்று கூறினார். ஆம், பிரியமானவர்களே, தேவனுடைய பரிசுத்தம், காலத்தோடு மாறிப் போவதில்லை. அற்பமாய் ஆரம்பிக்கப்படும் நன்மையான காரியங்களுக்கும், அற்பமாய் தோன்றும் தீமையான காரியங்களுக்கும் ஒரு ஆரம்பம் உண்டு. பின்பு அவை வள ர்ந்து பெருகி அதன் பலனை கொடுக்கும். இருதயத்தின் நிறைவி னாலே வாய் பேசும். சிறிய நெருப்பு பெரிய காட்டுத்தீயை உண்டாக்கி ன்றது போல, மாறுபாடான சிறிய வார்த்தைகள் பெரும் விபரீதங்களை உண்டாக்கும். நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத் திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் தன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான். மனிதன் பேசும் எல்லா வார்த்தைகளுக்கும் கணக்கு ஒப்பு விக்கும் நாள் ஒன்று உண்டு. எனவே, நன்மையான வார்த்தைகளையே பிரயோஜனம் உண்டாகும்படி பேசக்கடவோம்.

**யாக்கோபு 3:5**

**அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந் தும் பெருமையானவைக ளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளு த்திவிடுகிறது!**

**ஜெபம்:** வார்த்தையில் உண்மையுள்ள தேவனே, அற்பமானவைகள் என்று ஆகாத சம்பாஷணைகளிலே நான் என்னை வஞ்சித்துக் கொள்ளாதபடி க்கு, என் வாயின் வீண் வார்த்தைகளிலிருந்து காத்துக் கொள்வீராக. இரட் சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்வு தரும் அடிப்படை உண்மைகள்

கலப்பையினால் வயலை உழுது, கைகளினால் விதைகளைத் தூவி, கைளினாலே அறுவடை செய்த காலம் மலையேறிவிட்டது. ஒரு வயலை அல்ல ஒரு கிராமத்தின் விஸ்தாரத்தையே ஒரே நாளில் உழுது, விதைக்கக்கூடிய நவீன இயந்திரங்கள், இன்று விவசாயத்திலே உபயோத்திலுள்ளதை ஒரு வயதான விவசாயி கண்டு கொண்டார். காலங்கள் மாறிப்போய்விட்டது. மனிதர்கள் தங்கள் நாளாந்த அலுவல்களை செய்து முடிக்கும் முறைமைகளும் மாறிக் கொண்டே இருக்கின்றது. ஆனால் வாழ்க்கையின் அடிப்படை அம்சங்களை யாரால் மாற்ற முடியும்? உலகம், நாகரீகம் என்ற போர்வையை போர்த்திக் கொண்டிருந்தாலும், மனிதர்கள் தங்கள் வயிற்றை நிரப்ப ஏதாவது ஆகாரத்தை உண்ண வேண்டும் என்னும் நிலைமையை மாற்ற முடியாது. அரிசியை இடித்து மாவாக்கி தங்கள் ஆகாரங்களை தயாரிக்கும் எளிமையான வாழ்க்கையை வாழும் குடும்பங்களாக இருந்தாலும், உச்சிதமாக ஆகாரங்கள் பரிமாறப்படும் இடாம்பீகரமான மாளிகைகளாக இருந்தாலும், விண்வெளிக்கு செல்லும் விஞ்ஞானிகளாக இருந்தாலும் தங்கள் வயிற்றை நிரப்ப ஏதோ ஆகாரத்தை உட்கொள்கின்றார்கள். விவசாய முறைமைகள் மாற்றப்பட்டிருக்கலாம், ஆனால் விவசாயி எதை விதைக்கின்றானோ, அதையே பன்மடங்காய் அறுப்பான் என்னும் அடிப்படை உண்மையை மாற்ற முடியுமோ? அவனவனுடைய கிரியைகளுக்குதக்க பலனை அவனவன் பெற்றுக் கொள்ளும் காலம் சமீபித்திருக்கின்றது. நாங்கள் வாழும் வீடு, அதனுள்ளே இருக்கும் உபகரணங்கள், தொடர்புச் சாதனங்கள், அணியும் ஆடைகள், நாங்கள் மற்றவர்களுக்கு காண்பிக்கும் வெளித் தோற்றங்கள் இப்படியாக எங்கள் வாழ்க்கையின் தராதரம் உயர்ந்திருக்கலாம். ஆனால் ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் அவன் பிதாகிய தேவனுடைய சித்தத்தை தன் சொந்த வாழ்வில் நிறைவேற்ற வேண்டும். இந்த அடிப்படைச் சத்தியத்தை யாராலும் மாற்ற முடியாது. பிரியமானவர்களே, மாறிப் போகும் இந்த உலகத்தை நோக்கிப் பார்க்காமல், எப்போதும் எங்களை தெரிந்து கொண்ட பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை எங்கள் சொந்த வாழ்வில் நிறைவேற்றுகின்றவர்களாக வாழ்வோமாக.

**கலாத்தியர் 6:7**

**மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.**

**ஜெபம்:** நித்தியமான தேவனே, நீர் நியமித்திருக்கும் வாழ்க்கையின் அடிப்படை உண்மையை மறந்து, இந்த உலகத்தின் போக்குகளினால் மாய்ந்து போகாமல், உம் சித்தத்தை நிறைவேற்ற எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| திங்கள் \| ஆனி 8 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 15:1 –5 |
|---|---|

# உயர்ந்த அடைக்கலம்

ஆகாயத்திலே வட்டமிடும் பருந்தைக் கண்ட, தாய் கோழியானது, தன் குஞ்சுகளுக்கு கொக்கரித்து எச்சரிப்பு விடுத்தது. உடனே, அந்த குஞ் சுகள் யாவும் உடனடியாக தாயின் செட்டைகளுக்குள்ளே ஓடிவந்து மறைந்து கொண்டது. இந்த உலகத்திலே பாவ இருள் சூழந்திருக்கின் றது. அவற்றின் மத்தியிலே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் எங்கள் நிரந்திர வசிப்பிடமாகிய பரலோக வீட்டிற்கு சென்ற டையும் வரைக்கும் உலகத்தின் இருள் எங்களை மேற்கொள்ளாதபடிக்கு நாங் கள் எச்சரிக்கையுள்ளவர்களாக இரு க்க வேண்டும். கர்த்தரை என்றும் நம் பிக்கையாக கொண்ட மனுஷன் பாக் கியவானாய் இருக்கின்றான். கர்த்த ருடைய கண்கள் அவன்மேல் நோக்க மாயிருக்கின்றது. எனக்கு எல்லாம் தெரி யும், நான் எதையும் சமாளிப்பேன் என்று வாழ்பவன் சுயநம்பிக்கையுடை யவன். கர்த்தர் மேல் நம்பிக்கையாக இருக்கின்றவன், அவருடைய வார்த் தைக்கு கீழ்ப்படிகின்றவனாக இருக்கி ன்றான். இவ்வண்ணமாக கர்த்தரு டைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவ ருடைய வழிகளிலே நடக்கின்ற மனுஷனைக் குறித்து “அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான் கன்மலைகளின் அரண்கள் அவனு டைய உயர்ந்த அடைக்கலமாகும் அவன் அப்பம் அவனுக்குக் கொடுக் கப்படும் அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்” என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. கர்த்தருடைய வழியில் நடக்கின்ற மனு ஷனுடைய நாளாந்த வாழ்க்கை இந்த பூமியிலே எப்படியாக இருக்கும்? அவனுடைய வாழ்வில் சுயநீதிக்கு இடமில்லை, அவன் தேவன் நீதியை நிறை வேற்றுகின்றவனாயிருப்பான். **அவன் வாயில்** வஞ்சகம் இருக்கா து, எப்போதும் செம்மையானவைகளையே பேசுவான். மற்றவர்களை ஒடுக்குவதால் தனக்கு கிடைக்கும் ஆதாயத்தை வெறுக்கின்றான். அவன் பரிதானங்களை (லஞ்சம்) வாங்காதபடிக்கு **தன் கைகளை** உதறி விடு கின்றான். பொல்லாத யோசனைகளுக்கு **தன் செவிகளை** விலக்குகின் றான். **தன் கண்களால்** தீமையானவைகளையும் அசுத்தங்களையும் அவன் பார்க்க விரும்புவதில்லை. இவ்வண்ணமாக அவன் தேவனுடைய வார் த்தைக்கே எப்போதும் கீழ்ப்படிந்து நடக்கின்றவனாய் இருக்கின்றான்.

**ஏசாயா 33:16**

**அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான் கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும் அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும் அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்.**

**ஜெபம்**: அடைக்கலமான அநாதி தேவனே, உம்மை என்றென்றும் அடை க்கலமாக கொண்டிருக்கும்படி உம்முடைய சத்தத்திற்கு நான் தாமத மின்றி கீழ்ப்படிந்து நடக்கும்படி என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உலகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகள்

ஒரு கிராமத்திலே பல ஆண்டுகளாக பலசரக்கு கடை ஒன்றை நடத்தி வந்த குடியானவன், அந்த கிராமத்திலுள்ள மக்களுடைய வாழ்க்கைத் தரத்திற்கு கட்டுப்படியாகும்படி நியாயமாக வியாபாரம் செய்து வந்தான். அந்த கிராமத்தில் வேறு கடைகள் இல்லையென்று அறிந்த பட்டணத்திலுள்ள வேறொரு வியாபாரியானவன், தன்னுடைய கடையின் கிளையொன்றை அந்தக் கிராமத்திலே ஆரம்பித்தான். வாடிக்கையாளர்களை தன் வசப்படுத்தும்படிக்கு, மலிவு விற்பனை என்ற பெயரில் பல நெறிமுறையற்ற காரியங்களைச் செய்தான். இதனால் அந்த குடியானவனின் வியாபாரம் வெகுவாய் பாதிக்கப்பட்டது. பல ஆண்டுகளாக வியாபாரம் செய்து வந்த குடியானவன், அந்தப் புதிய பட்டணத்து வியாபாரியை அணுகி, நீங்கள் இந்த கிராமத்தில் வியாபாரம் செய்வதற்கு எந்தத் தடையுமில்லை ஆனால் என்னுடைய வியாபாரமானது பாதிக்கும்படிக்கு ஏன் இப்படியான நெறிமுறையற்ற காரியங்களை செய்கின்றீர்கள் என்று கேட்டார். பட்டணத்து முதலாளியோ, பதிலுரையாக: இதைத்தான் “வணிக போட்டி” (business competition) என்று அழைப்பார்கள். இதில் என்ன தவறு என்று கேட்டான். ஆம் பிரியமானவர்களே, முறையற்ற இந்த சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். இன்றைய உலகிலே, வேத பிரமாணங்களுக்கு எதிரான காரியங்களை நடப்பிக்கும்படிக்கு, பல மனிதர்கள் உலக ஞானம் போதிக்கும் கவர்ச்சிகரமான பதங்களை பயன்படுத்துகின்றார்கள். இந்த உலகின் போக்கின்படி அவை சர்வ சாதாரணமான காரியங்களாக இருக்கலாம் ஆனால் அவை தேவனுடைய வார்த்தைக்கு முரணானதாக இருக்குமாயின் அவை யாவும் அநீதியே. மற்றவர்களுக்கு சேர வேண்டிய ஆதாயத்தை எந்த முறையிலும் நாங்கள் அபகரிக்கக் கூடாது. என்னுடைய உற்பத்திச்சாலையை நான் சிறப்பாக முகாமைத்துவப் படுத்துகின்றேன் என்று மற்றவர்களுக்கு செம்மையாக சேர வேண்டிய படியை தடைசெய்வதும் அநீதியான செயல். அநீதி எல்லாம் பாவம்தான் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது (1 யோவான் 5:17). இப்படியாக வியாபாரத்தில் மட்டுமல்ல, வாழ்க்கையின் பல பகுதிகளிலே மனிதர்கள் தேவ நீதிக்கு முரணான காரியங்களை செய்கின்றார்கள். நாகரீகம் தெரியாதவர்கள் என்று எங்களை மற்றவர்கள் ஒதுக்கிவிட்டா லும், இந்த உலக போக்குகளுக்கு உடன்படாமல், தேவனுடைய வார்த் தையின் வெளிச்சத்தில் நீதியாய் வாழப் பழகிக் கொள்வோம்.

**சங்கீதம் 9:8**

அவர் பூச்சக்கரத்தை நீதியாய் நியாயந்தீர்த்து, சகல ஜனங்களுக்கும் செம்மையாய் நீதிசெய்வார்.

**ஜெபம்**: நீதியுள்ள தேவனே, இந்த உலகத்தினாலே ஏற்றுக் கொள்ளப்படும் போக்குகளில் நான் சிக்கிக் கொண்டு, உம்முடைய நீதியை மறந்து போகாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ நீதியை நிறைவேற்றுங்கள்

அயலிலே வசிக்கின்ற இரு மனிதர்களுக்கிடையிலே ஏற்பட்ட அற்பமான கருத்து முரண்பாடு, வாக்குவாதமாக மாறி, அவர்கள் குடும்பங்களுக்கிடையே பெரும் பகையாக மாறிவிட்டது. நாள்பட்ட புண்களைக் போல அவர்களுக்கிடையிலே இருந்த பகை மனைந்து கொண்டே போயிற்று. சிலர் இவ்வகையான பிரச்சனைகளுக்கு தீர்வைக் காண வேண்டும் என்று பலவிதமான யுக்திகளை கையாளுகின்றார்கள். சிலர் மேலான அதிகாரங்களிடம் மேன் முறையீடு செய்து கொள்கின்றார்கள், வேறுசிலர் நீதிமன்றங்களிலே வழக்குகளை தாக்கல் செய்கின்றார்கள். இச் செய்கைகள் வழக்கத்திற்கு மாறனவைகள் அல்ல. இவை ஒரு நாட்டின் அடிப்படை மனித உரிமைகள். அவ்வுரிமைகளை அனுபவிக்க குடிமக்கள் யாவருக்கும் அதிகாரம் உண்டு. இது எங்கள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட தீர்மானம். இத்தகைய சூழ்நிலைகளிலே மனிதர்கள் யாவரும் ஏதோ ஒரு கட்டத்திலே சிக்கிக் கொள்வதுண்டு. அதற்கு எங்களில் எவரும் விதிவிலக்கானவர்கள் அல்லர். வீட்டிலோ, சபை ஐக்கியத்திலோ, உறவுகள், நண்பர், அயலவர் மத்தியிலோ இத்தனை முரண்பாடுகள் ஏற்படுவது சகஜம். அவற்றுள் பல எங்கள் கட்டுப் பாட்டிற்குட்பட்டவைகள். எங்கள் கட்டுப்பாட்டிற்குட்பட்டவைகளை தீர்த்துக் கொள்வதற்கு இந்த உலகத்திலே முறைமைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. “சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா? சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான், அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் அப்படிச் செய்கிறான். நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை? ” என்று தேவ ஊழியராகிய பவுல் சபைக்கு அறிவுரை கூறியிருக்கின்றார். பரம பிதாவுக்கு பிள்ளைகளாகிய நீங்கள் தேவ சாயலிலே நாளுக்கு நாள் பெருக வேண்டும். இந்த உலகத்திற்குரிய எண்ணங்களையும் அது உண்டு பண்ணும் செயல்களையும் எங்களைவிட்டு முற்றாக களைந்து விட வேண்டும். தேவ ஆவியை பெற்ற நாங்கள் தேவனுக்குரியவைகளையே எப்போதும் எங்களில் நடப்பிக்க வேண்டும்.

**கலாத்தியர் 5:16**

பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.

**ஜெபம்**: சம்பூரணராகிய பிதாவே, இந்த உலகத்தின் முறைமைகளின்படி என் பிரச்சனைகளுக்கு தீர்வு காணாமல், உம்முடைய வார்த்தையின்படி ஆவிக்கேற்றபடி வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| வியாழன் \| ஆனி 11 | 🕮 மாலை வாசகம் – ரோமர் 2:6 |
|---|---|

# நியாயத்தீர்ப்பின் நாள்

உலக பிரசித்திபெற்ற விளையாட்டுப் போட்டிகளிலே, பல ஆண்டு களாக பங்குபற்றிய மனிதன், தான் பங்குபற்றிய போட்டியிலே வெற்றி பெற்று, தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொண்டான். உலக பிரசித்தமான அந்த மனிதன், போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றபின்பு, வசதியற்ற மக்களுக்கு நன்மை பகர்க்கும் செயற்திட்டங்களை செய்து வந்தான். ஜனங்கள் மத்தியிலே நன்மதிப்பு பெற்ற அந்த மனிதனின் வாழ்க் கையில் எல்லாமே நன்றாக இருந்தது. பல ஆண்டுகளுக்கு பின், அந்த குறி ப்பிட்ட விளையாட்டு போட்டிகளை ஒழுங்குபடுத்தும் உலக பிரசித்தி பெற்ற ஸ்தாபனம், பெரும் அதிர்ச்சி தரும் செய்தி ஒன்றை வெளியிட்டது. விளையாட்டு போட்டிகளிலே கலந்து கொண்டு தங்கப்பதங்கங்களை பல ஆண்டுகளாக தட்டிக் கொண்ட அந்த மனிதன், உலக போட்டிகளை நடாத் தும் ஸ்தாபனத்தினால் தடைசெய்யப்பட்ட உடற்பெலத்தை ஊக்குவி க்கும் போதைவஸ்தை, தந்திரமாக உபயோகித்துள்ளார் என்பதை உறுதி செய்தார்கள். அதன் விளைவாக, அந்த மனிதனின் தங்கப் பத க்கங்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டது. அவன் உயிரோடு வாழும் நாட்களில், அந்த ஸ்தாபனத்தின் எந்த போட்டிகளிலோ அல்லது ஸ்தா பனம் சார்ந்த எந்த நிகழ்ச்சியிலோ பங்குபற்ற முடியாது என தடை செய்யப்பட்டான். அவனுக்கிருந்த நன்மதிப்பு, இப்போது அபகீர்த்தியாக மாறிவிட்டது. பாருங்கள், காலங்கள் சென்றாலும், இந்த உலகிலுள்ள ஸ்தாபனங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தரவுகளும் பெலனும் மட்டுமே இருக்கின்ற போதும், தாங்கள் போட்ட சட்டதிட்டங்களை மீறிய மனிதர் களை, அவர்கள் தப்பிப்போகவிடுவதில்லை. ஆண்டுகள் கடந்து சென் றாலும் ஆளுகை முடிந்து போகாத, சர்வத்தையும் படைத்த, சகலமும் அறிந்த, சர்வ வல்லமையுள்ள தேவனுடைய நியாத்தீர்ப்பிற்கு யார் தப் பிப் போக முடியும்? ஒருவராலும் கூடாது! எனவே, கலங்காதிருங்கள், பட்ட பகல் போல உங்கள் நீதியை விளங்கச் செய்வார். அதே நேரத் திலே, உங்கள் வாழ்வில் அறிக்கைபண்ணி விட்டுவிடாத அநீதியான செயல்கள் இருக்குமாயின், உங்களுக்கு கிடைத்த இந்த அருமையான நாட்களை பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள். ஒப்புரவாக வேண்டி யவர்களுடன் ஒப்புரவாகுங்கள். மன்னிப்பை தாராளமாக கொடுங்கள், மன்னிப்பை பெற்றுக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 9:7**

**கர்த்தரோ என்றென்றை க்கும் இருப்பார் தம்மு டைய சிங்காசனத்தை நியாயத்தீர்ப்புக்கு ஆயத் தம்பண்ணினார்.**

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, நாட்கள் பொல்லாதவைகளாக மாறிக் கொண்டிக்கும் உலகிலே விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிப் போ காமல் உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# நீதிமான்களின் முடிவு

அயலிலிலே வாழ்ந்த அந்த துஷ்ட மனிதனின் வாழ்க்கையைப் பார்த்தீர்களா? நான் அறிந்த காலம் முழுவதும் அந்த மனிதன் எங்கள் தாத்தாவிற்கு வெகுவாய் அநியாயம் செய்தான். தான் நினைத்த யாவையும் நடத்தி முடித்தான். இப்போது நியாயமாக வாழ்ந்த தாத் தாவும் இல்லை. அந்த மனிதனும் இல்லை. நீதிக்கு இந்த உலகத்தில் இடமில்லை என்று ஒரு இளைஞன் கூறினான். அவனுடைய தந்தையார், வேதத்திலே இயேசு கூறிய ஒரு சம்ப வத்தை ஞாபகப்படுத்தினார். “ஐசுவ ரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான் அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். லாசரு என்னும் பேர் கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான் அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசல ருகே கிடந்து, அவனுடைய மேஜை யிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிரு ந்தான். நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவ தூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான் ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்ப ட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசரு வையும் கண்டான்”. அவன் தன் தவறான வாழ்க்கையை அங்கே உண ர்ந்து, தன்னை தேற்றும்படி வேண்டிக் கொண்டான். ஆனால் அவனோ நித்தியமாய் வேதனைக்குட்படுத்தப்பட்டான். பூமியில் வாழும் தன் சகோதரருக்கு சாட்சி கூறும்படி லாசருவை அனுப்பும்படி வேண்டிக் கொண்டான். விடுவிக்கப்படமுடியாத பரிதாபகரமான நிலைக்கு அவன் தள்ளப்பட்டுப் போனான். மகனே: இந்தப் பூமியிலே ஒரு மனிதன் எப்ப டியாக வாழப்போகின்றான் என்பது அவனுடைய தீர்மானம். அதன் முடி வில் அவனவன் தன் தன் பலனை பெற்றுக் கொள்வான். இந்தப் பூமியிலே தங்கள் இஷ்டப்படி துன்மார்க்க வாழ்வைத் தெரிந்து கொண் டவர்கள் அதற்குரிய நித்திய நிந்தையையும் இகழ்ச்சியையும் அடையும் காலம் உண்டு. அப்பொழுது, நீதிமான்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். எனவே நீதிமான்களின் வாழ்வை அற்பமாக எண்ணாதே என்று பதிலளித்தார்.

**தானியேல் 12:2**

**பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.**

**ஜெபம்**: கிருபை நிறைந்த தேவனே, என் துன்ப வேளைகளிலும் நான் உமக்கெதிராக வார்த்தைகளை பேசாதபடிக்கு விசுவாசத்தின் வார்த்தைகளை அறிக்கை செய்ய என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவை சார்ந்த வாழ்க்கை

வறுமைக் கோட்டிற்குள் இருக்கும் பாமர மக்கள் வாழும் ஊர் ஒன்றிற்கு மிஷனரியாக சென்ற ஒரு ஊழியர், பல கஷ்டங்கள் மத்தியிலே தேவ சேவையை செய்து வந்தார். அவருடைய சேவையின் ஆரம்ப ஆண்டுகள் மிகவும் கடினமாக இருந்தது. பல போராட்டங்களின் மத்தியிலே தன் ஊழியத்தை செய்து வந்த அந்த தேவ ஊழியர், ஜெபத்திலும் உபவாசத்திலும் வேதத்தை வாசித்து தியானிப்பதிலும் அதிகதிமாக வளர்ந்து வந்தார். பலஆண்டுகள் சென்றபின்பு, அவ்வூரிலே ஏற்பட்ட எழுப்புதலினால், அந்த ஊழியரின் பெயரும் அவருடைய சேவையும், அனுபவ சாட்சியும் பிரபல்யமானது. வசதியும் வாழ்க்கைத் தரமும் உயர்வடைந்தது. ஒரு சிறிய ஊரிலே இருந்த அவர் இப்போது, உலகெங்கும் சென்று வந்தார். ஒரே நேரத்திலே பல சபைகளிலிருந்து அவருக்கு அழைப்புகள் வந்ததால், அவர் எங்கு செல்வது என்று தீர்மானிக்க வேண்டியிருந்ததால், ஆங்காங்கே ஏற்பட்ட சில அசௌகரியங்களும், கருத்து முரண்பாடுகளும் அவருக்கு பெரிதானதாக தோன்றவில்லை. காலங்கள் கடந்து அவருக்கு ஏற்பட்ட உலக அங்கீகாரம் குறைவுபடத் தொடங்கியபோது, செல்லும் இடமெங்கும் தன் ஆவிக்குரிய வாழ்வை தன் பேச்சினாலே நியாயப்படுத்தி, நிரூபிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருப்பதை அவர் உணர ஆரம்பித்தார். ஆரம்ப நாட்களிலே நான் என் கர்த்தராகிய இயேசுவில் ஒட்டப்பட்ட கொடியைப் போல அவரிலே சார்ந்திருந்தேன், ஆனால் பின்னய நாட்களிலே, அந்த ஊரில் ஏற்பட்ட எழுப்புதலினால் உண்டான மனித அங்கீகாரத்திலே சார்ந்து கொண்டேன் என்பதை உணர்ந்த போது பெரும் வேதனைப்பட்டார். பிரியமானவர்களே, நாங்கள் மிஷனரியாக பிரத்தியேகமான அழைப்பை பெற்றிருந்தாலும், அல்லது ஒரு விசுவாசியாக இருந்தாலும் எந்த நிலையிலும், குறிப்பாக எங்கள் உயர்வான நேரங்களிலே, எங்களைத் தாழ்த்தி, எங்களைக் குறித்த பிதாவாகிய தேவனுடைய சித்தம் என்ன என்பதை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். கர்த்தருக்கு காத்திருந்தேன், அதனால் வரத்தைப் பெற்றேன், அல்லது பெரும் செல்வத்தை பெற்றேன் இனி நான் எதையும் செய்யலாம் என்று வாழக்கூடாது. நாங்கள் யாராக இருந்தாலும், எந்த நிலையிலே இருந்தாலும், எப்போதும் கர்த்தராகிய இயேசுவில் சார்ந்து வாழும் வாழ்க்கை வாழ வேண்டும்.

**யோவான் 15:6**

ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, என்னுடைய வாழ்க்கையில் வரும் பதவி உயர்வுகளை, செழிப்பை பின்பற்றிச் சென்று, உம்மை மறந்து போகாதபடிக்கு உணர்வுள்ள வாழ்க்கை வாழ என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மேலான அழைப்பை பெற்றவர்கள்

பல நெருக்கடியான சூழ்நிலைகளின் மத்தியிலே, தங்களுடைய ஒரே மகனை வளர்த்து வந்த பெற்றோர். தங்கள் பெலத்தின்படியேயும், பல வேளைகளிலே பெலத்திற்கு அதிகமாகவும் தங்கள் மகனுடைய வாழ்க்கை மேம்பட வேண்டும் என்று அயராது உழைத்து வந்தார்கள். அந்த உழைப்பு வெறும் பணம் அல்ல. உழைப்பின் பலனாக சொற்ப பணம் கிடைத்தது, ஆனால் அந்த உழைப்பிற்குள் தங்கள் மகனைக் குறித்த அன்பானது நிறைவாகவே இருந்தது. இப்போது அவர்களுக்கு பாடுபட்டு உழைக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுடைய பிரயாசத்தின் பலனாக, அவர்களின் மகன், பெரும் உத்தியோகஸ்தனானான். வசதியான வீட்டிலே, வீட்டை பராமரிக்கும் உதவியாளருடன் வாழ்கின்றார்கள். அவர்களின் மகனிடமிருந்து மாதாந்தம் தேவைக்கதிகமாக பணம் வங்கிக் கணக்கிலே வந்து சேரும். ஆனால் பாசமாக வளர்த்த மகனை பார்ப்பது மிகவும் அபூர்வமாக இருப்பதை நினைத்து தினமும் துக்கப்படுவார்கள். அவன் பெரும் உத்தியோஸ்தனானதினால் அவனுக்கு தன் பெற்றோரை சந்திக்க நேரமில்லை. இது உணர்ச்சியை தூண்டிவிடும் சம்பவம் அல்லவா! பாவத்திற்கும் சாபத்திற்கும் உட்பட்டிருந்த எங்களை மீட்கும்படியாக தம்முடைய உயிரையே பலியாக கொடுத்த இயேசுவின் மேலான அன்பை சற்று நினைத்துப் பாருங்கள். சபையில் அங்கத்தவராக உள்ளேன், காணிக்கை தசம பாகங்களை முறையாக செலுத்துகின்றேன். சபையின் செயற்பாடுகளுக்கு ஆதரவு அளிக்கின்றேன். ஆனால் என்னை மீட்டுக் கொண்ட தெய்வத்தின் பாதத்திலிருந்து அவருடன் பேச (ஜெபம்செய்ய) நேரமில்லை. அவர் சொல்வதை கேட்டு (வேதத்தை வாசிக்க), அவரோடு உறவு கொண்டாட, அவருடைய பிரசன்னத்தின் களிகூர நேரமில்லை. பிரியமானவர்களே, கிறிஸ்தவ வாழ்க்கை என்பது என்ன? சற்று சிந்தித்துப் பாருங்கள்! நித்திய ஜீவனுக்கென்று அழைப்பைப் பெற்றிருக்கின்றீர்கள். அது சபை கட்டிடத்தையோ அல்லது சபையின் செயற்பாடுகளை குறித்த காரியமோ அல்ல. அதிலும் மேன்மையானது. அது என்னையும் உங்களையும் குறித்த காரியம். எங்கள் ஆன்மீக வாழ்வை குறித்த காரியம். நாங்கள் தேவனை அறிகின்ற அறிவிலே நாளாந்தம் வளரவேண்டும். அந்த அறிவு எங்களை திவ்விய சுபாவத்திற்கு பங்காளிகளாகும் பொருட்டு, எங்கள் மனங்களை மறுரூபமாகச் செய்யும்.

**யோவான் 17:3**

ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.

**ஜெபம்:** பரம தந்தையே, என்மீது அன்புகூர்ந்து நீர் என்னை அழைத்த அழைப்பின் மேன்மையை மறந்து போகாமல், உம்மை மனதார அன்பு செய்யும் வாழ்க்கை வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தகுதி பெற்றவன் யார்?

குறிப்பிட்ட ஸ்தாபனமொன்றின் அலுவலகத்தில் வேலையை பெற்றுக் கொள்ளும்படிக்கு நேர்முகத்தேர்வுக்காக (interview) ஒரு மனிதன் அழை க்கப்பட்டிருந்தான். எப்படியாவது அந்த வேலையை தான் பெற்றுக் கொள்ளும்படிக்கு தன்னிடம் இருந்த கல்வி மற்றும் தனித்துவமான திற மைகளையும் (skills), தகுதிகளையும், வேலை அனுபவங்களையும் மட்டுப்ப டுத்தப்பட்ட நேரத்திற்குள், ஒன்றுகூட விடாமல் நேர்த்தியாகக் கூறி முடித்தான். அவன் தன்னைப் பற்றி கூறியவைகள் யாவும் உண்மையே. பொதுவாக ஸ்தா பனங்களிலே வெற்றிடங்களை நிரப்புவ தற்கு, அந்தந்த வேலைகளை செய்வ தற்கு தேர்ச்சி பெற்றவர்களையும், அனுபவமுள்ளவர்களையும், தங்கள் ஸ்தாபனத்தின் கலாச்சாரத்திற்கு ஏற்றவர்களையும், சராசரியான ஊதியத்தை பெற சம்மதிக்கின்றவர்க ளையும் தெரிந்தெடுப்பார்கள். அவ்வண்ணமாகவே, வேலையை தேடிச் செல்பவர்களும், தங்களுக்கு பிடித்த ஸ்தாபனத்தில், சராசரியான வேலையும், அதிகப்படியான சம்பளமும், தங்களுக்கு ஏற்ற முகாமை யாளரும் இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். இவை இந்த உலகத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு முறைகள். ஆனால் தேவனு டைய வேலையை செய்வதற்கு ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்ன? யார் அவருடைய ஊழியத்தை செய்ய முடியும்? கர்த்தருக்கு முன்பாக நின்று நான் இதை செய்ய பாத்திரன் என்று யாரால் கூறமுடியும்? இனி மேட்டிமையான பேச்சைப் பேசாதிருங்கள் அகந்தையான பேச்சு உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம் கர் த்தர் ஞானமுள்ள தேவன் அவர் செய்கைகள் யதார்த்த மல்லவோ? பலவான்களின் வில் முறிந்தது. தள்ளாடினவர்களோ பலத் தினால் இடைகட்டப்பட்டார்கள். திருப்த்தியாயிருந்தவர்கள் அப்பத்துக்காக கூலி வேலை செய்கிறார்கள் பசியாயிருந்தவர்களோ இனிப் பசியாயிரார் கள். அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவ னைக் குப் பையிலிருந்து உயர்த்துகிறார் அவர்களைப் பிரபுக்களோடே உட்கார வும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார் பூமி யின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள் அவரே அவைகளின்மேல் பூச்சக்கரத்தை வைத்தார். ஆதலால் கர்த்தருக்கு முன்பாக எங்க ளைத் தாழ்த்துவதே எங்களுக்கு இருக்க வேண்டிய தகுதியாகும்.

**1 சாமுவேல் 2:8**

அவர் சிறியவனைப் புழு தியிலிருந்து எடுத்து, எளி யவனைக் குப்பையிலிரு ந்து உயர்த்துகிறார்.

**ஜெபம்**: சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதலளிக்கும் தேவனே, உம்முடைய திவ்விய அழைப்பைப் பெற்றுக் கொள்ள என்னிடம் எந்த தகுதியும் இல் லை. நீர் எனக்குத் தந்த இந்தப் பெரிதான சிலாக்கியத்திற்காக நன்றி! இர ட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# அனுப்புகிறவர் நான் அல்லவா

ஒரு காலகட்டத்திலே, தேவனுடைய ஜனங்கள் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து பின்மாற்றமான வாழ்க்கை வாழ்ந்த போது, மீதியானி யரிடம் தேவ ஜனங்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் ஜன ங்கள் தங்களுக்கு ஏற்பட்ட நெருக்கத்தின் நிமித்தம் மலைகளிலுள்ள கெபி களையும், குகைகளையும், அரணான ஸ்தலங்களையும் அடைக்கலமா க்கிக்கொண்டார்கள். மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப்புத்திரரும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பி வந்து, அவர்களது விளைச்சலையும், மந்தைகளையும் மிருக ஜீவன்களையும் அழித்து வந்தார்கள். தேவ ஜனங்கள் தமக்குண்டான நெருக்கத்தில் மனந்திரு ம்பி மீதியானியர் நிமித்தம் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். அந்நாட்க ளிலே கிதியோன் என்னும் மனிதன், கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீப மாய் அதைப் போரடித்தான். கர்த்தரு டைய தூதனானவர் அவனுக்குத் தரிச னமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி: ஆ என் ஆண்டவனே, கர்த் தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவா னேன்? அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக் கிற இந்தப் பலத்தோடே போ. நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய் உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என் றார். அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதி னாலே ரட்சிப்பேன் இதோ, மனாசேயில் **என் குடும்பம் மிகவும் எளி யது.** என் தகப்பன் வீட்டில் **நான் எல்லாரிலும் சிறியவன்** என் றான். அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடேகூட இருப்பேன் ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார். பிரியமானவர்களே, தேவனாலே வல்லமையாக பயன்படுத்தபட்ட மனி தனாகிய கிதியோன் தன் தகுதியைக் குறித்து தேவனிடம் கூறியவை களைப் பாருங்கள். தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகின்ற எளிமையானவர்கள் தேவ தூதர்களை தரிசிக்கின்றார்கள். எனவே தேவ னுக்கு முன்பாக உங்களை வெறுமைப்படுத்தி ஒப்புக் கொடுங்கள், தேவன் தமக்கு உகந்த பாத்திரமாக உங்களை பயன்படுத்துவார்.

**நியா 6:15**

ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன் இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளி யது என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்.

**ஜெபம்**: உள்ளங்களை ஆராய்ந்தறிக்கின்ற தேவனே, என் உள்ளத்தில் பெருமைக்கு இடங் கொடுக்காமல், உண்மையுள்ள தாழ்மையான உள் ளத்தை கொண்டிருக்கும்படி என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கனமான அழைப்பு

நான் இசையை முறைப்படி கற்று அத்துறையிலே பாண்டித்தியம் பெற்றவன். முன்னைய வாழ்நாட்களிலே உலக பிரசித்தி பெற்ற ஸ்தாபனங்களினால் வெளியிடப்பட்ட பல பாடல்களுக்கு இசையமைத்தேன் என்று, துதி ஆராதனைக் குழுவிற்கு இயக்குனராக இருப்பதற்குரிய தன் தகுதிகளை ஒரு மனிதன் கூறிக் கொண்டான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள முன்பு எங்களுக்கு இருந்த இந்த உலகத்தின் தகுதிகள் தேவனுடைய கனமான ஊழியத்தை செய்தவற்குரிய சான்றிதழ்களாக மாற முடியாது. நான் என் தகுதிகளை கூறி, நான் என்னை எப்படியும் அழைத்துக் கொள்ளலாம் ஆனால் தேவன் ஒரு மனிதனை தம்முடைய கனமான ஊழியத்திற்கு ஏற்படுத்தினால் மட்டுமே அவன் தேவனுடைய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வான். தேவன் ஒரு மனிதனை அழைத்தாலொழிய அவன் தேவனை அறிய வேண்டிய பிரகாரம் அறிய முடியாது. தேவனுடைய ஆசாரிப்பு ஸ்தலத்தின் (தெய்வீக கூடாரத்தை) வேலைகளை செய்வதற்கு தகுதி பெற்றவர்கள் யார்? மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: பாருங்கள், கர்த்தர் யூதாவின் கோத்திரத்தில் ஊரின் மகனான ஊரியின் குமாரன் **பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து**, அவன் விசித்திரமான வேலைகளை யோசித்துச் செய்யவும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்யவும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கவும், மரத்தில் சித்திர வேலை செய்து சகல விநோ தமான வேலைகளைச் செய்யவும், அவனுக்கு **ஞானத்தையும் புத்தி யையும் அறிவையும் அருளி,** அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார். அவன் இருதயத்திலும், தாண்கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபின் **இருதயத்திலும், போதிக்கும் வரத்தையும்** அருளினார். எனவே தேவன் உங்களை அழைத்து, பாவமறக்கழுவி, இரட்சிப்பின் வஸ்திரத்தை தந்து, தூய வாழ்வு வாழும்படி வேறு பிரித்திருந்தால், உங்கள் முன்னைய நாட்களுக்குரிய மேன்மைபாரட்டுதலை விட்டுவிடுங்கள். ஒருவேளை முன்னைய வாழ்நாட்களிலே எங்களுக்கு இருந்த தகுதிகள் தேவனுடைய ஊழியத்திற்கு ஒத்தாசையாக இருக்கலாம், அப்படியானால் அந்த ஏற்பாடு தேவன் எங்களுக்கு கொடுக்கப்பட்ட சிலாக்கியம்.

**எபிரெயர் 5:4**

மேலும், ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை.

**ஜெபம்**: உன்னதமான தேவனே, எனக்கிருக்கும் உலக தகுதிகளினால் உம்மை பிரியப்படுத்த முயலாமல், என்னை தாழ்த்தி என்னிடம் உள்ளதை முழு மனதோடு உம்மிடத்தில் அர்ப்பணிக்கின்றேன். என்னை ஏற்றுக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மகிமை தேவனுக்கே!

ஒரு ஆசாரிப்பு கூடாரம் உண்டாக்கப்பட்டிருந்தது. அதின் முந்தின பாகத்தில் குத்துவிளக்கும், மேஜையும், தேவசமுகத்தப்பங்களும் இருந்தன. அது பரிசுத்த ஸ்தலமென்னப்படும். இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது. அதிலே பொன்னாற் செய்த தூபகலசமும், முழுவதும் பசும் பொன் தகட்டால் மூடப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன. அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன. அதற்கு மேலே மகிமையுள்ள கேருபீன்கள் வைக்கப்பட்டுக் கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன. இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங்கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள். இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன்மாத்திரம் வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான். இந்த கனமாக ஆராதனை முறைமைகளை நிறைவேற்றுவதற்கு ஆசாரியர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அந்த முறைமையை புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்த்தராகிய இயேசு கிறிஸ்து மாற்றியமைத்தார். வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, தம்மை விசுவாசிப்பவர்களுக்கு நித்திய மீட்பை உண்டுபண்ணினார். நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு எங்கள் மனச்சாட்சியைச் செத்தக்கிரியைகளறச் சுத்திகரித்திருக்கின்றது. இவ்வண்ணமாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வழியாக, ஆராதிப்பதற்கும், ஆராதனை நடப்பிப்பதற்கும் எங்களை தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கியிருக்கின்றார்.

**வெளிப்படுத்தல் 1:6**

நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

**ஜெபம்:** சகலமும் படைத்த தேவனே, உம்முடைய வார்த்தையிலே நிலைத்திருந்து, அதன் வழியிலே வாழ்வதே செழிப்புள்ள வாழ்க்கை என்பதை உணர்ந்து கொள்ளும் இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**வெள்ளி | ஆனி 19** 📖 மாலை வாசகம் – சங்கீதம் 46:1 –3

# "நான் உன்னோடே இருப்பேன்"

தேவனுடைய ஜனங்களை எகிப்தின் அடிமைத்தன வாழ்விலிருந்து செழிப்புள்ள கானான் என்னும் தேசத்திற்கு வழிநடத்துவதற்கு மோசே என்னும் மனிதனை தேவனாகிய கர்த்தர் முன்குறித்திருந்தார். மோசே, இஸ்ரவேலிலே, லேவி என்னும் கோத்திரத்திலே பிறந்தான். அவன் பிறந்த நாட்களிலே, இஸ்ரவேல் ஜனங்களுக்குள்ளே பிறக்கும் ஆண் குழந்தைகள் யாவும் கொல்லப்பட வேண்டும் என்று எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் கொடூரமான சட்டத்தினை பிறப்பித்திருந்தான். மோசேயின் பெற்றோர் பார்வோனுக்குப் பயந்ததால், பிள்ளையை ஒளித்து வைக்கக்கூடாமல், நாணல் கூடையில் குழந்தையை வைத்து, பார்வோனின் குமாரத்தி ஸ்நானம் பண்ணும் போது, நதியோரமாக அந்தக் கூடையை வைத்தார்கள். பார்வோனுடைய குமாரத்தி அவனை எடுத்துத் தனக்குப் பிள்ளையாக வளர்த்தாள். அரண்மனையிலே வளர்க்கப்பட்ட "மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்." (அப் 7:22) இந்த உலகத்தின் பார்வையின்படி, இஸ்ரவேல் ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து அவர்களை வழிடத்திச் செல்வதற்கு, மோசே தகுதிபெற்றவனாக இருந்தான். தனக்குண்டான பெலத்தினால், தன் ஜனத்திற்கு நீதி செய்ய முற்பட்டான். பார்வோன் அந்தக் காரியத்தைக் கேள்விப்பட்டபோது, மோசேயைக் கொலைசெய்ய வகைதேடினான். மோசே பார்வோனிடத்தினின்று தப்பியோடி 40 வருடங்கள் மீதியானியரின் தேசத்திலே சஞ்சரித்தான். அவனுக்கு 80 வயதானபோது, கர்த்தர் அவனுக்கு தரிசனமாகி, என் ஜனங்களை மீட்டுக் கொள்ளும்படி உன்னை பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா என்றார். அதற்கு மோசே: பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும், நான் எம்மாத்திரம் நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் என்று, ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான். ஏனெனில், இந்த உலகத்தினால் உண்டாயிருந்த தகுதியினால் ஒன்றும் செய்ய முடியாது என்று மோசே நன்கு அறிந்திருந்தான். பின்பு தேவன் தன்னோடு இருப்பதே தன் தகுதி என்பதை திட்டமாக அறிந்து கொண்டான். ஆம், பல ஜனங்கள் எங்களோடிருந்தாலும், நாங்கள் கற்று தேர்ந்திருந்தாலும், ராஜ மாளிகையிலே வளர்க்கப்பட்டாலும், தேவன் எங்களோடு இல்லை என்றால், எங்களது தகுதிகளினால் வரும் இலாபம் அற்பமானதும், இந்த உலகத்தோடு அழிந்து போகின்றதுமாயிருக்கும்.

**யாத்திராகமம் 3:12**

**அதற்கு அவர்: நான் உன்னோடே இருப்பேன்**

**ஜெபம்**: பரலோக தந்தையே, என் பிறப்பினாலோ, வளர்ப்பினாலோ அல்லது உம்மால் எனக்குண்டான ஆசீர்வாதங்களினாலோ உண்டான தகுதியிலே நம்பியிராமல் எப்போதும் உம்மையே சார்ந்திருக்கும் உள்ளத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவை அறியும் அறிவின் மேன்மை

ஒரு சனசமுக நிலையத்திலே பல வருடங்களாக ஒற்றுமையாக சேவையாற்றி வந்த இரு உறுப்பினர்களுக்கிடையிலே, ஒரு குறிப்பிட்ட விடயத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், அவர்களுக்கிடையிலிருந்த நட்பில் விரிசல் ஏற்பட்டது. நாளடைவிலே, அந்த விரிசல் இருவருக்கி டையில் வாக்குவாதத்தை ஏற்படுத்தியது. ஆரம்பத்திலே இருவரும் குறிப்பிட்ட விடயத்தைக் குறித்த தங் கள் அபிப்பிராயத்தை ஆணித்தரமாக ஒருவருக்கொருவர் வலியுறுத்தி வந்தா ர்கள். பேச்சுவார்த்தைகள் தடம்புரண்டு சென்று கொண்டிருந்த போது, அவர்க ளில் ஒருவர் தன்னுடைய கருத்தை உறுதிப்படுத்த முடியாது போன போது, “நான் யார் என்று தெரியாமல் துணி வாய் பேசுகின்றாயா?” என்று மற்றவ ரிடம் கூறினார். பாருங்கள், இவ்வளவு காலமும், சக உறுப்பினர்களாக, ஒருமைப்பாட்டுடன் சேவை செய்தவர்கள், தீடீரென தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையின் தகமைகளை பேச ஆரம்பித்து விட்டார்கள். உலகத்தி லே இத்ததைய பேச்சுகளுக்கு இடமுண்டு. ஆனால் இத்தகைய பேச்சு க்கள் தேவனைச் சார்ந்து வாழ்பவர்களுக்கு தகாதது. தேவ சேவையை அர்ப்பணிப்போடு செய்து வந்த பவுல் அடிகளார், கிறிஸ்துவின் சேவை க்காக தன்னை அர்ப்பணித்த பின்பும், தன்னுடைய கல்வி, சமுக அந்த ஸ்து, கோத்திரம், மத வைராக்கியம், குடியுரிமை, மற்றும் தன் குற்ற மற்ற வாழ்வைப் பற்றிப் பேசினார். தன் முன்னைய வாழ்வின் தகை மைகளுக்கு ஒரு தலைப்பைக் கொடுத்தார். ஆனாலும் கிறிஸ்துவை அறியும் மேன்மைக்காக அவைகளை **குப்பையும் நஷ்டமும்** என்று தள்ளிவிட்டார். சற்று எங்கள் வாழ்க்கையை சிந்தித்துப் பார்ப்போம். எங் களுடைய தகைமைகள் என்ன? எங்கள் பிள்ளைகளுடைய தகைமைகள் என்ன? தேவ பிள்ளைகள் முன்னிலையில் நாங்கள் அறிக்கையிடும் எங் கள் வாழ்வின் தகுதிகள் என்ன? தேவ பிள்ளைகள் இல்லாத இடங்க ளிலே நாங்கள் அறிக்கையிடும் தகுதிகள் என்ன? எங்கள் மத்தியில் ஏற்படும் கருத்து முரண்பாடுகளின் வேளையிலே, சிலுவையைப் பற்றிய மேன் மையா? அல்லது இந்த உலகத்தினால் உண்டான மேன்மையா? எவை எங்கள் சிந்தையை ஆட்கொள்கின்றது? நாய் தான் கக்கினதைத் தின் னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்ற பிரகாரம் நாங்கள் எங்கள் சுய மேன்மைகளுக்கு திரும்பாமல், அவை களை குப்பையும் நஷ்டமும் என்று தள்ளிவிடுவோம்.

**பிலிப்பியர் 3:11**

**அவருக்காக எல்லாவற் றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன்.**

**ஜெபம்**: பரிசுத்த வாழ்வு வாழும்படி அழைத்த தேவனே, உம்முடைய அன்பை மறந்து, என் கிரியைகளை நான் மேன்மைப் படுத்தாதபடிக்கும், நீர் எனக்குள் இருப்பதே என் தகுதி என்று வாழ உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ ராஜ்யத்தின் உடன் சுதந்திரர்கள்

நாங்கள் தேவனுடைய ராஜ்யத்தின் பார்வையாளர்கள் அல்லர். ஒரு வேளை நாங்கள் பிரத்தியேகமான ஊழியத்திற்கு பிரித்தெடுக்கப்பட்ட வர்களாக இருக்கலாம், அல்லது தேவ ஊழியமானது இந்த பூமியில் நிறைவேறும்படி அதற்கு ஒத்தாசை வழங்குபவர்களாக இருக்கலாம். நாம் யாவரும் அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றவர்கள். தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாக அழைக்கப்பட்டிருக்கின்றோம். இந்த தகுதிக்கு எந்த மனிதனும் பாத்திரன் அல்ல. எங்களுடைய நீதியின் கிரியைகளினால் இவை எங்களுக்கு கொடுக்கப்படவில்லை. இது தேவனுடைய கிருபையினாலே உண்டானது. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே உலகத்தால் உண்டாகின்ற தகுதிகள், தகைமைகள், அங்கீகாரங்களை குறித்து எச்சரிக்கையாக இருங்கள். உங்களுக்கு உண்டான தகுதியினால், தேவனை அறியாதவர்களும், உலகத்தின் கல்விமான்களும் உங்களது வாழ்க்கை முறையை ஏற்றுக் கொண்டு, தங்கள் அங்கீகாரத்தை வழங்கினால், உங்கள் வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பாருங்கள். "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது." தேவனுக்கு பிரியமான வாழ்க்கையை அன்றும் இன்றும் என்றும் இந்த உலகமானது பகைகின்றது. எனவே, இந்த உலகத்தாலும், அதன் போக்குகளினாலும் உண்டாகும் எந்த கனத்தையும், தகுதியையும் அங்கீகாரத்தையும் கண்டு அவைகளினாலே திருப்த்தியடைந்து விடாதிருங்கள். தேவனால் உண்டாகும் தகுதியே தகுதி! தேவனால் உண்டான அங்கீகாரமே அங்கிகாரம். அதையே பற்றிக் கொள்ளுங்கள்.

**யோவான் 15:19**

நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.

**ஜெபம்:** அன்புள்ள தேவனே, உம்முடைய வார்த்தைகளின் வழியாக நீர் எங்களுக்கு கொடுத்திருக்கும் எச்சரிப்புக்களை அற்பமாக எண்ணாதபடிக்கு, உம்முடைய வார்த்தைகளின்படி வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் சாயல்

ஒரு உலகப் பிரசித்திபெற்ற மனிதனுடைய வாழ்க்கையை சித்தரிக்கும் மேடை நாடகம் ஒன்றை தாயரிப்பதற்கு பெரிய ஸ்தாபனம் ஒன்று அனுமதியைப் பெற்றுக் கொண்டது. குறிப்பிடப்பட்ட ஸ்தாபனத்தினர்கள் பிரசித்தி பெற்ற மனிதனுடைய பாத்திரத்தை தெரிந்தெடுப்பதில் அதிக கவனத்தை செலுத்தினார்கள். அந்த கதாபாத்திரத்திற்கு தெரிந்ததெடுக்கப்பட்ட நடிகர், உலக பிரசித்திபெற்ற மனிதனை குறித்த சுயசரிதைகளை மிகவும் ஊக்கமாக வாசித்தான். அவர் எங்கே பிறந்தார், எந்த கலாச்சாரத்திலே வளர்க்கப்பட்டார், எப்படியான ஆடைகளை உடுத்தினார், எப்படிப்பட்ட உணவு வகைகளை உண்டார், இப்படியாக அவருடைய நடை உடை பாவனையை உன்னிப்பாக கவனித்து, அவரைப் போலவே தான் மாற வேண்டும் என்று தான் உண்ணும் உணவுகளில் கூட கவனம் செலுத்தினான். ஏன் அப்படியாக செய்தான்? அதனால் அவனுக்கு வரும் இலாபம் என்ன? அவன் தன்னுடைய பெயருக்கு புகழ் தேடுவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. அதுமட்டுமல்ல இதனால் அவனுக்கு ஊதியமாக ரொக்கப் பணமும் கொடுக்கப்படும். பாருங்கள், இந்த உலகத்தோடு அழிந்து போகும் பேருக்கும் புகழுக்கும் எவ்வளவாக மனிதர்கள் விடா முயற்ச்சியாக உழைக்கின்றார்கள். அழியாத ராஜ்யத்திற்காக அழைக்கப்பட்டிருக்கும் நாங்களோ நித்தியராகிய இயேசுவைப் போல நாளுக்கு நாள் அவருடைய சாயலுக்கு ஒப்பாக மாறுவதற்கு முன்குறிக்கப்பட்டிருக்கின்றோம். இது உலக பொருளுக்கும் புகழுக்குமுரிய நடிப்பு அல்ல. இது ஈடு இணையில்லாத நித்திய மகிமைக்குரியது. முதலாவதாக, இந்த அழைப்பின் மேன்மையை அறிந்து கொள்ளும்படி பிரகாசமுள்ள மனக்கண்களை உடையவர்களாக இருக்க வேண்டும். அந்த அழைப்பு எங்கள் பொக்கிஷமாக மாற வேண்டும். கர்த்தராகிய இயேசு எப்படிப்பட்டவர் என்பதை அறியும் அறிவில் பெருக வேண்டும். அதன் பொருட்டு கர்த்தருடைய வேதத்தை கருத்தோடு தினமும் வாசிக்க வேண்டும். அவைகளை எப்போதும் எங்கள் இருதயத்தின் பொக்கிஷமாக்கிக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தை தியானித்து, அதன்படிக்கு எங்கள் வாழ்க்கை முறைமைகளை நாளுக்கு நாள் மாற்றியமைக்க வேண்டும்.

**ரோமர் 8:29**

தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்

**ஜெபம்**: உன்னதமான தேவனே, நித்தியராகிய இயேசுவின் சாயலிலே நாள்தோறும் வளர்ந்து பெருகும்படி அவரைப் போல மாறும் நித்திய வாழ்வின் மேன்மையை உணர்ந்து கொள்ளும் இருதயத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இயேசுவை எங்கே காணாலாம்?

பிள்ளை பிறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னதாகவே, இளம் தம்பதிகள், பிள்ளைக்கு என்ன பெயர் சூட்டுவதென்றும், ஆண் பிள்ளைக்குரிய சில பெயர்களையும், பெண் பிள்ளைகளுக்குரிய சில பெயர்களையும் தெரிந்தெடுத்தார்கள். தம் பிள்ளைக்கு அழகாக கிறிஸ்தவ பெயரை சூட வேண்டும். ஆலயத்திலே பிரதிஷ்டை செய்ய வேண்டும். முடிந்தால் ஒரு கிறிஸ்தவ பாடசாலையில் கற்பிக்க வேண்டும். தவறாமல் ஆலயம் கொண்டு செல்ல வேண்டும் என்று தங்கள் பிள்ளை கிறிஸ்துவை சார்ந்த பிள்ளையாக வளர வேண்டும் என்ற ஆசை அத்தம்பதியினரிடம் இருந்தது. இவைகள் நன்மையான ஆசைகள். ஆனால் இவற்றை செய்வதன் அடிப்படைக் காரணத்தை ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் உணர்ந்து கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவைப் போல வாழ வேண்டும் என்பதே அடிப்படைக் காரணமாக இருக்க வேண்டும். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே எங்களிலும் இருக்கவேண்டும். அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஏன் அவர் அப்படியாக தன்னைத் தாழ்த்தினார்? நம்மிடத்திலே அன்புகூர்ந்தபடியால் அவர், நம்மை மீட்கும் பொருட்டு, நமக்காக தம்மைத் தாழ்த்தினார். வாழ்வில் என்ன நடந்தாலும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே தம்முடைய ஆகாரம் என்று கூறினார். நன்மை செய்திருந்தும், மனிதர்கள் அவரைப் பகைத்தார்கள், தூற்றினார்கள் ஆனால் அவரோ அவர்கள் அறியாமைக்காக பிதாவை வேண்டிக் கொண்டார். ஏழை, எளியவர்கள், திக்கற்றவர்களைக் கண்டு மனமிரங்கினார். பாவ சோதனை ஏற்பட்ட போது தேவ வார்த்தையால் அவைகளை ஜெயித்தார். ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதே அவருடைய விருப்பம். இப் படியாக வர்ணித்துக் கூற முடியாத அவருடைய திவ்விய சுபாவங்கள் எண்ணற்றவைகள். இப்படிப்பட்ட திவ்விய சுபாவங்களே ஒரு கிறிஸ் தவனை அடையாளப்படுத்தும் பண்புகளாகும். இந்தப் பண்புகளை எங்கள் வாழ்க்கையில் மற்றவர்கள் காண வேண்டும். அதாவது, இயேசு கிறிஸ்துவை மற்றவர்கள் எங்களில் கண்டு நற்சாட்சி பகர வேண்டும்.

**பிலிப்பியர் 2:5**

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது

**ஜெபம்**: அன்புள்ள பிதாவே, பெயரளவில் கிறிஸ்தவனாக வாழாமல், கிறிஸ்துவின் திவ்விய சுபாவங்களை மற்றவர்கள் காணும்படிக்கு என்னுடைய வாழ்வு மாறும்படிக்கு என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – மத்தேயு 5:45 – 48

# ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்

**1 பேதுரு 4:7**

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்.

தன்னுடைய ஆண்டுகள் சீக்கிரமாய் கடந்து போகின்றது என அறிந்து கொண்ட தந்தையார், தன் சொத்துக்களை தன்னுடைய பிள்ளைகளுக்கு பிரித்து கொடுத்தார். அந்த நாள் எப்போ வரும் என்று காத்திருந்த அவருடைய குமாரர்களில் ஒருவன், தனக்கு பிடித்த வாழ்க்கையை வாழ வேண்டும் என்று தன் குடும்பத்தோடு வேறு பட்டணத்திற்கு சென்று வாழ முடிவெடுத்தான். அவனுடைய போக்கை கண்டு கொண்ட தந்தையாரும், அவனுடைய சகோதரரும் அவனுக்கு புத்திமதி கூறினார்கள். ஆனால் அவனோ, கேளாதவன் போல தன் மனதை கடினப்படுத்திக் கொண்டு, தன் இஷ்டப்படி சென்றுவிட்டான். ஆண்டுகள் கடந்து சென்று, வாழ்க்கையில் பிரச்சனைகள் வந்த போது, அதன் மூல காரணத்தை உணராமல், மாற்று வழிகளை கைக்கொண்டு நடந்தான். இவையெல்லாம் இந்த உலகிலே யாவருக்கும் நடக்கும் சர்வசாதாரணமான காரியங்கள் என்று தன் கொள்கைகளை கூறி, தட்டிக் கழித்துவிடுவான். ஏனெனில் தந்தையிடமிருந்து பெற்ற சொத்துக்கள் அவனின் பின்னடைவுகளை சீர் செய்வதற்கு பக்கபலமாக இருந்தது. ஆனால் அவனுடைய வாழ்க்கையிலோ எந்த சீர்திருத்தமும் காணமுடியவில்லை. இப்படிப்பட்ட மனநிலையோடு வாழும் மனிதர்கள் பலர். பிதாவாகிய தேவன் தாமே தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். கிருபையின் நாட்களை கூட்டிக் கொடுக்கின்றார். ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரு ம்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். ஆனால் மனிதர்களோ, தந்தையின் சொத்துக்களை பெற்றுக் கொண்ட மகனைப் போல அகந்தையுள்ளவர்களாக வாழ்கின்றார்கள். தங்கள் வாழ்க்கையின் நிகழ்வுகள் ஒவ்வொன்றிற்கும் தத்துவங்களை பேசிக் கொள்கின்றார்கள். ஆனால், எவ்வளவு ஆண்டுகள் அப்படியா கப் போக முடியும்? எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாகின்றது. எனவே நீங்கள் மற்றவர்களுடைய வாழ்க்கை முறையை பார்த்து சோர்ந்து போகாதபடிக்கு, தெளிந்த புத்தியுள்ளவர்களாக எப்பொழுதும் ஜெபத்திலே விழித்திருங்கள்.

**ஜெபம்**: நீடிய பொறுமையுள்ள தேவனே, உம்முடைய வார்த்தையை அசட்டை செய்து, தங்கள் தத்துவங்களிலே வாழ்பவர்களைப் போல நான் இழுப்புண்டு போகாதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு

ஒரு தாயாளவள், ஒரு சில வாரங்களுக்கு முன்னதாக தகரப் பேணியில் அடைக்கப்பட்ட பாற்கட்டியை கொள்வனவு செய்திருந்தாள். பாற்கட்டியை பிள்ளைகளுக்கு கொடுப்பதற்காக குறிப்பிட்ட பேணியை எடுத்தபோது, அதன் பாவனைக்கு உகந்த திகதி முடிவடிந்திருந்ததைக் கண்டு கொண்டாள். இந்த பூமியிலே எல்லாவற்றிற்கும் ஒரு ஆரம்பமும் முடிவும் உண்டு. அவை உயிரினங்களாக இருக்கலாம் அல்லது மற்றய படைப்புக்களாக இருக்கலாம் அவை யாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. பூமியும் அதிலுள்ள யாவும் முடிவடைவதற்கும் ஒரு கால எல்லை எங்கள் தேவனாகிய கர்த்தரால் நியமிக்கப்பட்டிருக்கின்றது. எனினும், அந்த கால எல்லைக்குள் வாழும் மனிதன், இந்த உலகம் கண்டிருக்கும் வளர்ச்சியைக் குறித்து பெருமை அடைந்திருக்கிறான். உலக அறிவு, விஞ்ஞானம், தொழில் நுட்ப வளர்ச்சி என்று கூறும் மனிதர்கள், சர்வத்தையும் உருவாக்கிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தருக்கு மேலாக தங்கள் நிலையை உயர்த்துகின்றார்கள். தேவனைப்பற்றிய அறிவை அற்பமாக எண்ணுவதுடன், தேவன் நியமித்திருக்கும் ஒழுங்குக்கு எதிராக துணிகரமான வார்த்தைகளை பேசுகின்றார்கள். இப்படியாக மனித அறிவு, உலக ஞானம், உலக ஐசுவரியம், அந்தஸ்து என்று பல தகுதிகளையும் தராதரங்களையும் தங்களுக்குள்ளே ஏற்படுத்தி அந்த போர்வைக்குள் வாழ்கின்றார்கள். வானமும், பூமியும், அதிலுள்ள யாவும் முடிவுக்கு வரும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. “மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது. வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின்மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று. அது இருந்த இடமும் இனி அதை அறியாது.” இந்த உண்மையை உணராதபடிக்கு இந்த உலக ஞானம் மனிதர்களின் கண்களை குருடாக்கியிருக்கின்றது. கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் **அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது**. அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலும் உள்ளது.

**சங்கீதம் 103:17**

**கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, இந்த உலகத்தின் மாயைக்குள் சிக்கி, அதனால் என் மனக் கண்கள் குருடாகிப் போகாதபடிக்கு, உம்முடைய ஞானத்தினால் நிறைந்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுக்கு உகந்த ஆராதனை

பல மாதங்களாக என் மகனை சந்திக்க முடியவில்லை. தொலை பேசியில் பேசுவதற்கும் அவனுக்கு நேரமில்லாமல், தன்னுடைய வியா பார அலுவல்களில் கடுமையாக வேலை செய்து வருகின்றான். எப்ப டியும் தந்தையார் தினமன்று என்னைச் சந்திக்க வருவான் என்று திட நம்பிக்கையோடு, வயது சென்ற தந்தையார் தன் நண்பருக்கு கூறி னார். தந்தையார் தினமன்று, பலரும் பார்த்து வியகத்தக்க பரிசுப் பொரு ட்கள் பிரபல்யமான இன்ரநெற் ஸ்தா பனமொன்றின் (on-line) வழியாக அனு ப்பி வைக்கப்பட்டது. மாலை நேரத் திலே தந்தையாரை வாழ்த்தும்படிக்கு, அவர் தங்கியிருந்த மட்டுப்படுத்தப் பட்ட உறுப்பினர்கள் தங்கும் சிறப்பு முதியோர் இல்லத்தில், நரம்பு வாத்தி யங்களின் (String instruments) இசை குழு வந்து பாடல்களை பாடி சிறப்பித்தார்கள். தொடர்ந்து அங்கி ருந்தவர்களுக்கு இன்சுவையுள்ள விருந்து பரிமாறப்பட்டது. ஆனால் தன் தந்தையை சந்திக்க மகனுக்கு முடியாமற் போயிற்று என்று தொலைபேசி வழியாக தந்தையார் அறிந்து கொண்டார். மற்றவர்கள் முன்னிலையில் தன் மகனை குறித்து எதையும் கூற விரும்பவில்லை ஆனால் படுக்கையிலிருந்து, இந்த மாலையிலே உலகிற்கு நல்ல நாட கம் போட்டான், ஆனால் தன் தந்தையை சந்திக்க அவனுக்கு நேர மில்லை என்று தன் மகனின் மனநிலையைக் குறித்து வேதனைப்ப ட்டார். தன் தந்தையால் ஏற்றுக் கொள்ளவே முடியாத கொண்டாட்ட த்தை செய்வதால் வரும் பலன் என்ன? அவனுக்கு சுயதிருப்த்தி உண் டாகும். மற்றவர்கள் மத்தியில் அங்கீகாரமும் நற்பெயரும் கிடை க்கலாம். பிரியமானவர்களே, தேவனை சேவிப்பது என்பதன் கருப் பொருள் என்ன என்பதையும் தேவனுக்கு கொடுக்கும் ஆராதனையின் கருப்பொருள் என்ன என்பதையும் நாங்கள் மறந்து விடக்கூடாது. நேரங் கிடைத்தால் தேவனை ஆராதிப்பேன் அல்லது என் வெகுமதிகள், அவரை ஆராதிக்கும் என்று வாழ்வது மதியீனம். முதலாவது, தேவ னோடுள்ள உறவு, அவருடைய ராஜ்யம், அவருடைய நீதி அதன் பின்பு இந்த உலகிலே எங்களுக்கு அவசியமானவைகள் யாவும் இருக்க வேண்டும். தேவனோடு எப்படி உறவாடுகின்றோம், அவருடைய வார் த்தைகளை வாசித்து, கேட்டு, தியானிப்பதினால் அல்லவோ. அவரோடு எப்படி பேசுகின்றோம்? ஜெபத்தின் வழியாக அல்லவோ. எனவே தேவ பிள்ளைக்குரிய அடிப்படைச் சத்தியத்தை மறந்து போய்விடாதிருங்கள்.

**மல்கியா 1:6**

நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமா னா னால் எனக்குப் பயப்ப டும் பயம் எங்கே?...

**ஜெபம்:** பரலோகத்தின் பிதாவே, உம்முடைய பலனைப் பெற்றுக் கொள் ளும்படி, நாள்தோறும் உம்மை நாடித் தேடி, உமது சமுகத்தில் உமக்கு பிரியமான ஆராதனை செய்யும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத் தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இதயபூர்வமான நற்கிரியைகள்

உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். எப்படியாக நாங்கள் கர்த்தரை கனம் பண்ண முடியும்? ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான் அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். (நீதி 19:17). திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது. (யாக் 1:17). சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒருகலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இயேசு கூறியிருக்கின்றார் (மத் 10:42) அதன் பிரகாரமாக, நாங்கள் ஏழை, எளியவர்களுக்கும், திக்கற்ற பிள்ளைகள், விதவைகளுக்கும், தேவ ஊழியத்தை நடப்பிக்கின்றவர்களுக்கும் உதவிகளை வழங்கி வருகின்றோம். இவைகளை செய்கின்றவர்கள், வேதம் கூறும் கருப்பொருளை உணர்ந்தவர்களாக தொடர்ந்தும் உற்சாகத்தோடு அவைகளை செய்ய வேண்டும். தேவனுடைய ராஜ்யம் பொருட்களையும் பண்டங்களையும் குறித்ததல்ல, அது எங்களை குறித்தது, எங்கள் உள்ளான மனிதனை குறித்தது. உன் வீட்டிலிருந்து காளைகளையும், உன் தொழுவங்களிலிருந்து ஆட்டுக் கடாக்களையும் நான் வாங்கிக்கொள்வதில்லை. சகல காட்டுஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள். மலைகளிலுள்ள பறவைகளையெல்லாம் நான் அறிவேன் வெளியில் நடமாடுகிற வைகளெல்லாம் என்னுடையவைகள் என்று தேவன் கூறியிருக்கின்றார். பொருளிலும் பணத்திலும் தேவன் பிரியப்படுகின்றவர் அல்லர். அவர் உங்களிலும் என்னிலும் பிரியப்படுகின்றவர். எங்கள் இருதயத்தை அவர் சமுகத்திலே கொடுக்கும் போது, அங்கே இருந்து புறப்படுகின்ற, ஸ்தோத்திர பலிகள், காணிக்கைகள், அன்னதானங்கள், பொருளுதவிகள், சரீர உதவிகள் யாவும் தேவனுக்கு சுகந்த வாசனையான பலியாக இருக்கும். எங்களது இதயபூர்வமான நற்கிரியைகளின்மேல் தேவன் எப்போதும் பிரியமாயிருக்கின்றார்.

**சங்கீதம் 51:17**

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான் தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

**ஜெபம்:** சகலமும் படைத்த தேவனே, எதை நான் உமக்கு தருவேன்? உமக்கு உகந்த ஜீவனுள்ள திருப்பலியாக என் உள்ளத்தை உமக்கு தருகின்றேன், ஆகாத எண்ணங்களை என்னைவிட்டு அகற்றியருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உன்னதமானவரின் பிள்ளைகள்

வாழ்க்கையிலே களைத்து இளைத்துப் போகும் நேரங்கள் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் ஏற்படுவதுண்டு. சிலர், தங்கள் வாழ்க் கையின் நாளாந்த பழுவினால் சலிப்படைந்து, வாழ்க்கையிலே ஒரு மாற்றம் வரவேண்டும் என்று காத்திருக்கின்றார்கள். வேறு சிலர், நன்மை செய்து, பாடனுபவிப்பதால், களைத்துப் போயிருக்கின்றார்கள். இன்னும் சிலர், பாவ அடிமைத்தன த்திலிருந்து வெளிவரமுடியாமல், யாருக்கு இதை சொல்வது என்ற ஏக் கத்துடன் தவித்துக் கொண்டிருக்கின் றார்கள். எங்களுக்கு இருக்கும் சரீர பெலத்தினாலோ, இந்த உலக ஞானத் தினாலோ நமது பெலவீனத்தை மேற் கொள்ள முடியாது. பாவ மன்னிப்பை விலை கொடுத்து பெற்றுக் கொள்ளக் கூடுமோ? யாராக இருந்தாலும், தேவனு டைய அனுக்கிரகத்தை பெற்றாலொ ழிய இந்த உலகத்தை வெற்றி கொள்ள முடியாது. தம்மிடம் வந்தோரை புற ம்பே தள்ளாத இயேசு இவை யாவற்றி லிமிருந்து விடுதலை கொடுக்கின்றவராயிருக்கின்றார். தேவனால் பிற ப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் நம்முடைய விசுவாசமே உலக த்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானர் தேவனுடைய குமாரன் என்று இருதயத்திலே விசுவாசித்து, அவன் தன் வாயினாலே அறிக்கையிட்டு, இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை தன் கிரியையிலே காண்பிக்கி ன்றவன் இந்த உலகத்தை ஜெயிக்கின்றான். நல்லோர் மேலும் தீயோர் மேலும் மழையை பெய்யப் பண்ணி, சூரியனை உதிக்கச் செய்கின்ற தேவன், தம்முடைய கிருபையை மனிதர்கள் யாவர்மேலும் பொழிகின் றார். ஆனால் யாவரும் அவரையும் அவருடைய அனுக்கிரகங்களையும் ஏற்றுக் கொள்ளுவதில்லை. அவரை ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள் யாவ ருக்கும் அப்பா பிதாவே என்று அவரை கூப்பிடும் புத்திர சுவிகாரத்தின் ஆவியை கொடுக்கின்றார். அந்த தேவ ஆவியை பெற்றவர்கள், உங்கள் பெலவீன நேரத்திலே சோர்ந்து பின்னடைந்து போய்விடாதிருங்கள். ஒரு வேளை பாவம் செய்திருந்தாலும், அது வளர்ந்து பெருக இடங்கொடுக் காமல், இயேசு வழியாக உங்கள் அப்பா பிதாவிடம் வந்து சேருங்கள். அவர் பாவங்களை மன்னித்து, சோர்ந்து போனவர்களை திடப்படுத்தி, இளைத்துப் போன உள்ளங்களில் எழுப்புதலை உண்டு பண்ணுவார்.

**ஏசாயா 40:31**

கர்த்தருக்குக் காத்திருக் கிறவர்களோ புதுப்பெல னடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இ ளைப்படையார்கள், நடந் தாலும் சோர்ந்துபோகார் கள்.

**ஜெபம்**: அப்பா பிதாவே என்று உம்மை அழைக்க அதிகாரம் தந்த தேவனே, உம்முடைய பிள்ளையாகிய நான், மற்றவர்களுடைய தப்பித ங்களை மன்னித்து மறந்து விடும்படி நல்ல இருதயத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நல்ல தகப்பன்

தன் நண்பர்களோடு விளையாடச் சென்ற சிறு பையன் காஞ்சொறி செடிகள் இருக்கும் இடத்திற்கு சென்றதால், அவன் கை கால்கள் தடித்து வீக்கமுற்றது. அதை அறிந்து கொண்ட பெற்றோர், அவனை ஆறுதல்ப்படுத்தி அதற்குரிய கை மருந்தைக் கொடுத்து, நண்பர்களோடு விளையாடும் போது அவதானமாக இருக்கும்படி கூறினார்கள். சில நாட்களுக்கு பின்பு மறுபடியும் நண்பர்களோடு விளையாடச் சென்ற அந்த சிறு பையன், சேற்றுக்குள் விழுந்ததால், அவன் அணிந்திருந்த உடையிலே, அழுக்குகளோடும், நாற்றத்தோடும் வீடு திரும்பினான். இப்படியாக ஒன்றில்லா விட்டால் இன்னொன்று என்ற பிரகாரமாக, நண்பர்களோடு விளையாடச் சென்றால் ஏதோ ஒரு பிரச்சனையில் மாட்டிக் கொள்வான். சில கிழமைகளாக அவனுக்கு எச்சரிப்பை வழங்கிய பெற்றோர், தகாத நண்பர்களின் கூட்டுறவே அடிப்படைக் காரணி என்பதை அறிந்து கொண்டதும், பெற்றோர், அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். பிரியமானவர்களே, மனிதர்களுடைய வாழ்க்கையிலே தவறு ஏற்படுவது சகஜம் என்று பலரும் கூறிக் கொள்வதை கேட்டிருக்கின்றோம். அது உண்மை. ஆனால், ஒன்றன்பின் ஒன்றாக தவறுகள் ஒரே அடிப்படைக் காரணியினால் ஏற்படுமாயின், அதற்குரிய தகுந்த நடவடிக்கையை நாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். “தவறுதலாக, ஊர் துழவாரங்களை பேசும் அந்தக் குழுவோடு சேர்ந்து, வீண் வார்த்தைகளை நினைக்காமல் பேசிவிட்டேன் என்று ஒரு பெண்மணி மனம் வருந்தினாள்” மனம்வருந்துதல் நல்லது. ஆனால் அத்தோடு நின்றுவிட முடியாது. அந்தக் குழுவைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அந்த சிறு பையன் பெற்றோரின் எச்சரிப்பை குறித்து கவனமெடுக்காததால், அவர்கள் அவனை சிட்சிக்க (நல்வழிப்படுத்தும்படி கண்டித்து தண்டித்தல்) வேண்டியதாயிற்று. அதுபோலவே, அப்பா பிதாவே என்று அழைக்கும் புத்திர சுவிகாரத்தின் ஆவியை பெற்ற எங்களை, பரம பிதா, நேசிக்கின்றார். எனவே நல்ல தகப்பனைப் போல எங்களை சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். தகப்பன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்து போய்விடாதிருங்கள்.

**எபிரெயர் 12:7**

**நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார் தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?**

**ஜெபம்**: இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, உம்முடைய பிள்ளையாகிய நானும் உம்மைப் போல இரக்கத்திலே செல்வந்தனாக இருப்பதன் மேன்மையை உணரும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எங்களை நேசிக்கும் தேவன்

ஒரு சிறு பையன், தன் பெற்றோரின் அறிவுரையைக் கேளாமல் பாட சாலையிலே தொடர்ச்சியாக குறும்புத்தனமான காரியங்களைச் செய்து வந்தான். ஒரு நாள், பாடசாலையின் அதிபர் பெற்றோரை அழைத்து அந்த சிறு பையனுடைய நடத்தையை குறித்துப் பேசினார். பாடசாலை யின் சட்டப்படி அவனுக்குரிய தண் டனை வழங்கப்பட்டது. இதனால் பெற் றோர் அவனைக் குறித்து திருப்த்தி யற்றவர்களாக இருந்தார்கள். அடுத்த சில நாட்களுக்குள், நுளம்புகளால் ஏற்படும் காய்ச்சலொன்றினால் அந்த பையன் பீடிக்கப்பட்டான். அவனது தாயானவள், தன் பிள்ளையை கண் ணும் கருத்துமாக கவனித்து வந்தாள். பொழுதுபட்டு இரவானதும், வைத்திய சாலை யிலுள்ள தாதிமார், தாயாரை சற்று நேரம் ஓய்வு எடுக்கும்படி வீடு செ ன்று வரும்படியும், தாங்கள் அவளுடைய பிள்ளையை பார்த்துக் கொள்வோம் என்றும் கூறினார்கள். அவர்களுக்கு நன்றி கூறிய தாயார், அவ னுடைய காய்ச்சல் தணியும் அறிகுறிகள் உண்டாகும் வரைக்கும் அவ்விடம்விட்டுப் போகாமல், இரவு முழுவதும் குறித்த நேர இடை வெளியில் தன் மகனுடைய உடல் வெப்பநிலையை சோதித்து, தன் னால் இயன்ற முதலுதவிகளை செய்து, ஜெபித்துக் கொண்டு இருந் தாள். இது தாயானவளுடைய அன்பு. தேவனுடைய வார்த்தையை பல முறை கேட்டும், அதை அசட்டை பண்ணி, தங்கள் பொல்லாத வழிக ளினால் தேவனைவிட்டு தூரமாய்ப் போன அவருடைய ஜனங்கள் அந் நிய ஜனங்களால் வெகுவாய் ஒடுக்கப்பட்டார்கள். அவர்களுடைய அழு குரல் தேவ சமுகத்திற்கு எட்டியது. அவர்களுடைய சிறுமையை கண்டார். கர்த்தர் எங்களை கைவிட்டார், ஆண்டவர் எங்களை மறந்தார் என்று ஜனங்கள் எண்ணினார்கள். ஆனால் கர்த்தர் தம்முடைய ஜனங்களை நோக்கி: ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்ப தில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் என்று கூறினார். எப்போதும் கர்த்தரை நோக்கிப் பாருங்கள். "கர்த்தர் உரு க்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார் என்றைக்கும் கோப ங்கொண் டிரார்." எனவே உயர் வானாலும் தாழ்வானாலும் தேவனை சார்ந்து வாழுங்கள்.

**சங்கீதம் 121:3-4**

**உன் காலைத் தள்ளாட வொட்டார் உன்னைக் கா க்கிறவர் உறங்கார். இதோ, இஸ்ரவேலைக் காக்கிற வர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.**

**ஜெபம்**: மனதுருகும் தேவனே, எங்கள் மீறுதல்களினிமித்தம் எங்களை தள்ளிப்போடாதபடிக்கு உம்முடைய கிருபையினாலே எங்களை காத்து, நாங்கள் உணர்வடையும்படி எங்களை வழிநடத்திச் செல்வதற்காக நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

உள்ளான மனிதன் மாதாந்த இலவச பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் FULL NAME:

முகவரி ADDRESS:

நகரம் CITY:

மாநிலம் PROVINCE:

தபால் குறியீடு POSTAL CODE:

**மேலதிக விபரங்கள்**

**whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

**Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ____________________

**மின் அஞ்சல் E-MAIL:**

____________________

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

gtachurch.ca

gtachurch.ca